தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

# முற்றம்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

ஊரக வளர்ச்சி
மற்றும் ஊராட்சித் துறை
விலை ரூ. 20/-
மலர் 25
இதழ் 02
ஜீன் 2023



## நிலையான வளர்ச்சி... தொடரட்டும் மகிழ்ச்சி...

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மகத்தான இரண்டு ஆண்டு சாதனைகள்




முனைவர். **ப. செந்தில்குமார்,** இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை,
தலைமைச் செயலாகம்,
சென்னை – 600 009


## வாழ்த்துரை

### அன்புள்ள சகோதரிகளே!

பெண்களின் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம் என்பதைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நலத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறார். அத்தகைய திட்டங்களில் சுய உதவிக் குழு மகளிரின் பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்களை செயல்படுத்துவதில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் என்றும் முன்னிலையில் உள்ளது என்பதை அனைவரும் அறிவர்.

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையில் 1989 ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் சிறு இயக்கமாக துவங்கப்பட்ட சுய உதவிக் குழு இயக்கம் இன்று இலட்சக்கணக்கான மகளிர் வாழ்வாதாரத்தை வளமுள்ளதாக்கும் இயக்கமாக வளர்ந்துள்ளது.

இவ்வியக்கத்தின் வழிகாட்டுதலில் பெண்கள் குழுவாக இணைந்து, பயிற்சிகள் பல பெற்று, கடன் இணைப்புகளின் மூலம் சுய தொழில் முனைவோராகவும், பல்வேறு தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு, இன்று பொருளாதார சுய சார்பு பெற்று, தன்னம்பிக்கை மிக்கவர்களாக திகழ்கின்றனர்.

இத்தகு சிறப்புப் பெற்ற சுய உதவிக் குழு மகளிரின் உற்றத் தோழியான தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம் இதழ், சுய உதவிக் குழு மகளிரின் சாதனைகளை வெளிப்படுத்தும் இதழாக 24 ஆண்டுகளைக் கடந்து 25ஆம் ஆண்டில் வெற்றிகரமாக அடிஎடுத்து வைக்க உள்ளது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பாக வெளியிடப்படும் முற்றம் இதழில் மகளிர் முன்னேற்றத்திற்காக அரசு மேற்கொண்டு வரும் பல்வேறு நலத் திட்டங்கள், மகளிர் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள், வெற்றிக் கதைகள், மகளிருக்கான கல்வி, தொழில், வேலைவாய்ப்பு, சுகாதாரமான சுற்றுச்சூழலை ஏற்படுத்துவதற்கான வழிமுறைகள், பொருளாதார மேம்பாட்டிற்கான திட்ட செயல்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு சிறப்பம்சங்கள் அடங்கிய தகவல்கள் வண்ணமிகு புகைப்படங்களுடன் ஒவ்வொரு மாதமும் வெளியிடப்பட்டு வருவது பாராட்டுதலுக்குரியது.

சுய உதவிக் குழு மகளிரின் முன்னேற்றத்திற்காக அரசு தீட்டி வரும் திட்டங்களின் வெற்றிக்கு உங்களின் அயராத செயல்பாடுகள் முன்னுதாரணமாக இருக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். உங்களுக்காகப் பாடுபடும் மகளிர் திட்டமும், முற்றம் இதழும் மேலும் மேலும் வளர்ந்தோங்க வாழ்த்துகிறேன்.

அன்புடன்,

3.5.23

நாள் : 31.05.2023

**(ப. செந்தில்குமார்)**



திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

## அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,

மகளிரின் வாழ்வில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தவும், அவர்களிடையே தன்னம்பிக்கையை உருவாக்கவும் 1983ஆம் ஆண்டு துவக்கப்பட்ட நமது தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் 40 ஆண்டு கால வரலாற்றில் பல்வேறு சாதனைகளைப் படைத்துள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

தமிழ்நாட்டில் 1989ஆம் ஆண்டு துவக்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழு இயக்கமானது இன்றைய தினம் 4.47 இலட்சம் சுய உதவிக் குழுக்களாக வளர்ச்சியடைந்துள்ளது. இன்னும் வளர்ந்து வருகிறது என்பதும் நீங்கள் அறிந்ததுதான்.

2006ஆம் ஆண்டு முதல் ஊரக வளர்ச்சித் துறையின் ஒரு அங்கமாக செயல்பட்டு வரும் நமது நிறுவனத்தின் வளர்ச்சிக்கு மேலும் வலுசேர்க்கும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், நமது துறைக்கு பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களும் ஆக்கப்பூர்மான திட்டங்களை செயல்படுத்தி வருகின்றனர்.

அந்த செயல்பாடுகளின் ஒருபகுதியாக, கிராமப்புறங்களில் உள்ள ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை வளம் பெறச் செய்ய HCL அறக்கட்டளையுடனும், சுய உதவிக் குழுக்களுக்கு விரைவாக வங்கிக் கடன் இணைப்புகளை வழங்கிட பாரத ஸ்டேட் வங்கியுடனும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்நடவடிக்கைகளின் மூலம் சுய உதவிக் குழுக்களின் பொருளாதார வளர்ச்சி மேலும் மேம்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோடை விடுமுறை முடிந்து கல்விக் கூடங்களுக்கு மாணவ – மாணவிகள் செல்லும் நேரம் இது. பள்ளி மற்றும் கல்லூரிகளில் சேர்வதற்காகவும், தொழிற்படிப்புகளில் சேர்வதற்காகவும் பிள்ளைகளும், அவர்தம் பெற்றோரும் பரபரப்புடன் செயலாற்றி வருகிறார்கள். தகுந்த படிப்பினை முடித்து வேலைக்குச் செல்லும் நிலையிலும் பலர் இருக்கிறார்கள். மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் குடும்பத்திலும் மேற்கண்ட நிகழ்வுகள் இருக்கும். கோடை விடுமுறை முடிந்து பள்ளி மற்றும் கல்லூரிக்குச் செல்லும் மாணவ–மாணவிகள் அனைவருக்கும் எனது வாழ்த்துகள். பல்வேறு துறைகளில் உயர்கல்வி பெறுவதற்கான வாய்ப்புகள் மாணவர்களுக்கு நிறைய உள்ளன. மாணவர்கள் தங்களுக்கு விருப்பமான துறையைத் தேர்ந்தெடுத்து, அதில் சிறப்பான தேர்ச்சி பெற்று வாழ்வில் வெற்றியடைந்திட வேண்டும்.

"எண்ணியதைச் செயல்படுத்துவதில் உறுதி உடையவர்களாக இருந்தால் அவர்கள் எண்ணியவாறே வெற்றி பெறுவார்கள்" என்பதைக் குறிப்பிடும்

எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்

என்ற குறள் வரியில் குறிப்பிட்டுள்ளவாறு, மகளிர் சுய உதவிக் குழுக்கள் அனைத்தும் வெற்றியை மட்டுமே கருத்தில் கொண்டு செயல்பட்டு வெற்றி பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்

மீண்டும் சந்திப்போம்...

அன்புடன்,

(மேலாண்மை இயக்குநர்)



திருமதி. **பா. பிரியங்கா பங்கஜம்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,

## அன்புள்ள சகோதரிகளே,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மகளிர் சுய உதவிக் குழுக்களின் மீது அளவற்ற அக்கறை கொண்டு, அவற்றின் வளர்ச்சிக்காகத் தீட்டும் திட்டங்களை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சிறப்பாக செயல்படுத்தி வருகிறது என்பது நமக்குப் பெருமையாகும்.

1983ஆம் ஆண்டு துவக்கப்பட்டு, 40 ஆண்டுகளாக வெற்றிகரமாக செயல்பட்டு வரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வெற்றிப் பயணத்திற்கு நீங்கள் அளித்த பங்களிப்பு அளப்பரியது என்றால் அது மிகையில்லை. உங்களால்தான் இவ்வெற்றி சாத்தியமானது. 50 ஆண்டுகள், 100 ஆண்டுகள் என இது மேலும் தொடர வேண்டும் என்பதே எனது விருப்பமாகும். எனது விருப்பம் நிச்சயமாக உங்களின் தன்னலமற்ற செயல்பாடுகளால் நிறைவேறும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இரண்டாண்டு ஆட்சிக் காலத்தில் நமது தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சாதனைகள் பலவற்றை படைத்து வருகிறது. நமது துறைக்கு பொறுப்பு வகிக்கும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களும், சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சிக்காகவும், மகளிர் முன்னேற்றத்திற்காகவும் சிறப்பாக செயல்பட்டு வருகிறார் என்பது சுய உதவிக் குழுக்களுக்கு மேலும் ஊக்கத்தை அளித்து வருகிறது என்றால் அது மிகையில்லை.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்னும் முதுமொழிக்கேற்ப சுய உதவிக் குழுவினர் ஒற்றுமையுடன் செயல்பட்டதால் தான் நமது இயக்கம் 40 ஆண்டுகளுக்கும் மேலாக தனது வெற்றிப் பயணத்தைத் தொடர்ந்து வருகிறது. இந்நிலை தொடர நீங்கள் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சுய உதவிக் குழு மகளிர் தங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு மட்டும் முன்னுரிமை கொடுப்பவர்கள் இல்லை என்பதும், பிறர் நலன் மீது அக்கறை கொள்வதில் அவர்களுடைய பங்களிப்பை அனைவரும் அறிவர்.

எனவே, முடிந்த வரையில் சமூக நலன் சார்ந்த செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்றும், குறிப்பாக தண்ணீர் சிக்கனம், பிளாஸ்டிக் ஒழிப்பு, மரம் வளர்ப்பு, சுற்றுப்புறத் தூய்மை, கழிவு நீர் மேலாண்மை மற்றும் பிற சுற்றுபுறச் சூழல் சார்ந்த செயல்பாடுகளில் அன்பு சகோதரிகளான நீங்கள் அனைவரும் கவனம் செலுத்த வேண்டும்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வெற்றிப் பயணத்திற்கு உறுதுணையாக இருக்கும் உங்களுக்கு என்றும் நமது நிறுவனம் உறுதுணையாக இருக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி... வணக்கம்.

அன்புடன்,

(பா. பிரியங்கா பங்கஜம்)

கவிதை, உடல் நல குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவி குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவி குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல் :
wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

tncdwH | Tncdw State
www.Tncdw.org | Tncdwofficial

"மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சிறப்பான செயல்பாட்டிற்காக மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வரும் ஆய்வுகள், ஊரக வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், செயல் இயக்குநர் ஆகியோர்களின் செயல்பாடுகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் குறித்த விபரங்களை தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் டுவிட்டர், இன்ஸ்ட்ராகிராம் மற்றும் முகநூல் பக்கங்களை பின்தொடருங்கள்.."

## குறளும் – பொருளும்

**இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்**
**துன்பம் துடைத்தூன்றும் தூண்**

தன்னலம் விரும்பாமல், தான் மேற்கொண்ட செயலை நிறைவேற்ற விரும்புகின்றவன் தன்னைச் சூழ்ந்துள்ள சுற்றத்தார், நண்பர்கள், நாட்டு மக்கள் ஆகிய அனைவரின் துன்பம் துடைத்து, அவர்களைத் தாங்குகிற தூணாவான்

# உள்ளே...


| | |
|---|---|
| "கள ஆய்வில் முதலமைச்சர்" திட்டத்தின் கீழ் ஆய்வுக் கூட்டம் | 07 |
| புதிய அமைச்சர் பதவியேற்பு | 09 |
| சென்னை விழா | 11 |
| மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்குதல் | 14 |
| தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் இரண்டாண்டு சாதனைகள் | 17 |
| மாம்பழ ரவா கேசரி | 33 |


சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுக்கு சந்தா சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, சந்தாக்களை சேர்த்த அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

தொடர்ந்து இவ்வாண்டும் முற்றம் இதழிற்கு சந்தா சேர்க்க நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலக்கை நிறைவு செய்திட அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளும் நடவடிக்கை மேற்கொள்ள முற்றம் இதழின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவி குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

– ஆசிரியர், முற்றம் மாத இதழ்

தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●

# முற்றம்

விலை ரூ. 20/- • மலர் 25 • இதழ் 02 • ஜூன் 2023

கௌரவ ஆசிரியர்கள்
திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
தலைமை செயல் அலுவலர்,
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

திருமதி. **பா. பிரியங்கா பங்கஜம்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

திருமதி. **ஜெ.இ. பத்மஜா,** இ.ஆ.ப.,
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
திரு. **எஸ். சின்னப்பன்,** செயலர், முற்றம்

ஆசிரியர் குழு
திருமதி. **க. முத்துமீனாள்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திருமதி. **எஸ். கவிதா,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **நா. அருள்ஜோதி அரசன்,** கூடுதல் இயக்குநர், VKP
திரு. **பி. மந்திராச்சலம்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **ஆர். சங்கர்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **வி. பிச்சை,** கூடுதல் இயக்குநர், NULM

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
நிர்வாக ஆசிரியர்
திருமதி. **ரா. ஜீவா,** பொது மேலாளர்,

நிதி நிர்வாகம்
திரு. **ச. இராஜேந்திரன்,** நிதி ஆலோசகர்,

பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்
திரு. **வா. ராகுலன்,** செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

துணை ஆசிரியர் : **ஏ. கண்ணன்**
பிழை திருத்துபவர் : **எஸ். எஸ். ரவிச்சந்திரன்**
கணினி வடிவமைப்பு : **பி.ஆர்.இ குழுமம்**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
**'முற்றம்'**
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்
ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

## சிறுசேமிப்பும்... பெரும் பயன்களும்...

அன்புள்ள வாசகர்களுக்கு,

இதுவரை இல்லாத கடும் வெப்பத்தை இந்த ஆண்டு அனுபவித்து வருகின்றோம். நமது சுகமான வாழ்க்கைக்காக இயற்கை வளங்களை தொடர்ந்து அழித்து வருவதன் விளைவே இப்படிப்பட்ட கொடூர வெப்பத்திற்கான காரணம்.

கல்வி நிறுவனங்கள் மாணவர்களின் தேர்ச்சியை வெளியிட்டுள்ள இந்த வேளையில், பிள்ளைகளின் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் மேம்பாட்டிற்கு கல்வி நிறுவனங்களை தேர்ந்தெடுப்பதிலும், பாடப் பிரிவுகளைத் தேர்வு செய்வதிலும் அனைத்திற்கும் மேலாக கல்விக் கட்டணத்திற்கு தேவையான பணத்தை தயார் செய்வதிலும் தீவிரமாக அலைந்து கொண்டிருப்பதை காணலாம். இது கோடை வெப்பத்தைவிட கடினமாகவே தோன்றும்.

மகளிர் குழுக்களில் உறுப்பினராக சேர்ந்து, தவறாமல் சேமிப்பு செய்து வரும் உறுப்பினர்களுக்கு இந்த சேமிப்பானது பெரும் உதவியாக இருக்கும். கல்வி ஆண்டு தொடங்கும் நேரத்தில் 80 விழுக்காடு குழு உறுப்பினர்கள் பிள்ளைகளின் கல்விக்காக சங்க கடன் பெறுகின்றனர் என்பது அனுபவத்தில் பார்க்கின்றோம்.

சேமிப்பு என்பதற்கு பல விளக்கங்கள் கொடுக்கப்படுகிறது. நாம் சேமிப்பை எவ்வாறு பார்க்கின்றோம். சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பெரும்பாலானோர் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களை சேர்ந்தவர்கள். இவர்களுக்கு சேமிப்பு என்பது இவர்களின் தேவைகளையும், அதைவிட மேலாக இவர்களின் குழந்தைகளின் ஆசைகளையும் தியாகம் செய்து சேர்த்து வைப்பதாகும். இந்த சிறுசேமிப்பானது கல்வி வளர்ச்சிக்கும், அவசர தேவைக்கும் கொடுத்து உதவுவதால் சேமிப்பு செய்வதை பழக்கமாக்கிக் கொள்வது நல்லது.

சேமிப்பு என கூறும்போதே மற்றொரு முக்கியமான சேமிப்பு நினைவிற்கு வருகின்றது. அது என்னவெனில் நிலத்தடியில் நீரை சேமித்து வைப்பது, தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்துவது, பயன்படுத்திய நீரை மரம், செடி கொடிகளை வளர்க்க பழக்கிக் கொள்வது, மழை நீரை நிலத்தடியில் சேமித்து வைப்பது போன்ற செயல்கள் சமுதாயத்திற்கு நாம் செய்யும் பெரும் உதவியாகும். சிறுதுளிகள் சேர்ந்துதான் பெரும் வெள்ளத்தை உருவாக்குகிறது.

இப்படிக்கு,

(எஸ். சின்னப்பன்)
ஆசிரியர், முற்றம்






# “கள ஆய்வில் முதலமைச்சர்” திட்டத்தின் கீழ் ஆய்வுக் கூட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 27.04.2023 அன்று விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், “கள ஆய்வில் முதலமைச்சர்” திட்டத்தின் கீழ், விழுப்புரம், கள்ளக்குறிச்சி மற்றும் கடலூர் மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு, மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. இ. பெரியசாமி, மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு. க. பொன்முடி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு, மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின், மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. செஞ்சி கே.எஸ்.மஸ்தான், மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. சி.வி.கணேசன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., அரசுத் துறைச் செயலாளர்கள், விழுப்புரம், கள்ளக்குறிச்சி மற்றும் கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை

## தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஆரம்ப பள்ளிகளுக்கும் விரிவுபடுத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம்







மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 04.05.2023 அன்று தலைமைச் செயலகத்தில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஆரம்ப பள்ளிகளுக்கும் விரிவுபடுத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. நா.முருகானந்தம், இ.ஆ.ப., உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மரு.ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. ககன் தீப் சிங், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி. பெ.அமுதா, இ.ஆ.ப., பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, இ.ஆ.ப., சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மைச் செயலாளர் திரு. சுன்சோங்கம் ஜடக் சிரு, இ.ஆ.ப., -மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## அரசு மறுவாழ்வு இல்லத்தில் வசிப்பவர்களுக்கு உதவிகள் வழங்குதல்





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 26.04.2023 அன்று செங்கல்பட்டு மாவட்டம், பரனூரில் உள்ள மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் அரசு மறுவாழ்வு இல்லத்திற்கு நேரில் சென்று, இல்லத்தில் வசிப்பவர்களுக்கு போர்வை மற்றும் உடைகளை வழங்கினார். உடன் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு, மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர் திருமதி. வரலட்சுமி மதுசூதனன், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆ.ர. ராகுல்நாத், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பன்னிரெண்டாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவிக்கு வாழ்த்து

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களை 09.05.2023 அன்று முகாம் அலுவலகத்தில், பன்னிரெண்டாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மதிப்பெண் பெற்ற திண்டுக்கல், அண்ணாமலையார் மில்ஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி செல்வி ச. நந்தினி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது, பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, இ.ஆ.ப., பள்ளிக்கல்வித் துறை ஆணையர் திரு. க. நந்தகுமார், இ.ஆ.ப., அண்ணாமலையார் மில்ஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியை மற்றும் அம்மாணவியின் பெற்றோர் உடனிருந்தனர்.






# புதிய அமைச்சர் பதவியேற்பு மற்றும் மாண்புமிகு அமைச்சர்களின் துறைகள் மாற்றியமைப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பரிந்துரையை ஏற்று தமிழ்நாடு அமைச்சரவையில் மாண்புமிகு அமைச்சர்களின் துறைகள் மாற்றம் செய்ய மாண்புமிகு தமிழ்நாடு ஆளுனர் திரு. ஆர்.என். ரவி அவர்கள் ஒப்புக் கொண்டார். அதன்படி, திரு. தங்கம் தென்னரசு அவர்களுக்கு நிதி, மனிதவள மேம்பாடு துறையும், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்களுக்கு கூடுதலாக தமிழ் ஆட்சி மொழி மற்றும் பண்பாட்டுத் துறையும், முனைவர். பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் அவர்களுக்கு தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவை துறையும் மற்றும் திரு. த. மனோ தங்கராஜ் அவர்களுக்கு பால் வளத் துறையும் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் புதிதாக பொறுப்பேற்றுக் கொண்ட மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினர் முனைவர். டி.ஆர்.பி. ராஜா அவர்களுக்கு தொழில் துறை ஒதுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களை 11.05.2023 அன்று தலைமைச் செயலகத்தில், துறைகள் மாற்றியமைக்கப்பட்ட மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேம்பாடு துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர்.பி.டி.ஆர்.பழனிவேல்தியாகராஜன், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு. த. மனோ தங்கராஜ் மற்றும் புதிதாகப் பொறுப்பேற்றுக் கொண்ட, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா ஆகியோர் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.




# ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர்களின் பயன்பாட்டிற்கு புதிய வாகனங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 10.05.2023 அன்று தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களின் பயன்பாட்டிற்காக 25 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 200 புதிய வாகனங்களை வழங்கிடும் அடையாளமாக 12 வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. இ.பெரியசாமி, தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி. பெ.அமுதா, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் (பயிற்சி) / முதன்மைச் செயலாளர் திரு. ஹர் சஹாய் மீனா, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் மரு.தாரேஸ் அகமது, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சிறப்புச் செயலாளர் முனைவர் எம். கருணாகரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.






## முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை தமிழ்நாடு அரசின் சார்பில் சிறப்பாக கொண்டாடுவது குறித்து ஆலோசனைக் கூட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 22.05.2023 அன்று தலைமைச் செயலகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை தமிழ்நாடு அரசின் சார்பில் சிறப்பாக கொண்டாடுவது குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., மற்றும் அரசுத் துறைச் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.






## பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், ரூ.25.67 கோடி மதிப்பீட்டில் 3,391 பயனாளிகளுக்கு அரசு நலத் திட்ட உதவிகளை, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 25.05.2023 அன்று வழங்கினார். இந்நிகழ்வின் போது, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் திரு. எஸ்.ரகுபதி அவர்கள், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள், மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் திரு. சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள், புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, இ.ஆ.ப., அவர்கள், இராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினர் திரு. நவாஸ்கனி அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி. வந்திதா பாண்டே, இ.கா.ப., அவர்கள், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். வை.முத்துராஜா அவர்கள், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.சின்னதுரை அவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.





# சென்னை விழா

## சர்வதேச கைத்தறி, கைவினைப் பொருட்கள் மற்றும் உணவுத் திருவிழா

சென்னை தீவுத்திடலில் சுற்றுலாத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் சென்னை விழா சர்வதேச கைத்தறி, கைவினைப் பொருட்கள் மற்றும் உணவுத் திருவிழா 28.04.2023 தொடங்கி மே மாதம் 21ந் தேதி வரை நடைபெற்றது. மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 28.04.2023 அன்று சென்னை விழா சர்வதேச கைத்தறி, கைவினைப் பொருட்கள் மற்றும் உணவுத் திருவிழா அரங்கங்களை திறந்து வைத்து பார்வையிட்டார்.



இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. கா.ராமச்சந்திரன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் திரு. ஆர்.காந்தி, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மாண்புமிகு மேயர் திருமதி. ஆர். பிரியா, துணை மேயர் திரு. மு.மகேஷ்குமார், சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் டாக்டர். பி. சந்தரமோகன், இ.ஆ.ப., சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி. பா.பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் / சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர் திருமதி. லி.பாரதிதேவி மற்றும் அரசுத் துறை அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




சென்னை விழா





### தமிழ்நாட்டில் தூத்துக்குடி மாவட்டம், புதூர் / விளாத்திக்குளம் ஒன்றியங்களிலுள்ள 95 கிராம ஊராட்சிகளில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டமான

# HCL (Samuday)- ஐ செயல்படுத்த தமிழ்நாடு அரசு மற்றும் HCL அறக்கட்டளை இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்

இந்தியாவில் செயல்படும் உலகளாவிய தொழில்நுட்ப நிறுவனமான HCL Tech-ன் கார்ப்பரேட் சமூகப் பொறுப்பு அமைப்பான HCL அறக்கட்டளை, அதன் முதன்மைத் திட்டங்களில் ஒன்றான HCL Samuday-ஐ தமிழ்நாட்டின் 95 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்த மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், தமிழ்நாடு அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி. பெ.அமுதா, இ.ஆ.ப., மற்றும் HCL அறக்கட்டளையின் திட்ட இயக்குநர் திரு. அலோக் வர்மா ஆகியோர் 03.05.2023 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இந்நிகழ்வில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் மரு. தாரேஸ் அகமது, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சிறப்புச் செயலாளர் முனைவர் மு.கருணாகரன், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி. பா.பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., கூடுதல் இயக்குநர் திருமதி. க. முத்துமீனாள், HCL நிர்வாகக் குழு உறுப்பினர் திரு. ஷிகர் மல்ஹோத்ரா, HCL அறக்கட்டளையின் துணைத் தலைவர் டாக்டர். நிதி புந்திர், குழு மேலாளர் திரு. பிரிஜோ தாருக், திரு. எம்.விஸ்வலிங்கம், திரு. வைபவ் சவுகான் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

HCL Samuday தமிழ்நாட்டில் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள புதூர் மற்றும் விளாத்திக்குளம் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 95 கிராம ஊராட்சிகளில் 1,40,000 பயனாளிகளுக்கு பயனளிக்கும் வகையில் நீர்வள மேலாண்மை, விவசாயம், சுகாதாரம், கல்வி, ஊட்டச்சத்து மேலாண்மை போன்ற துறைகளில் கவனம் செலுத்தி, பின்தங்கிய குடும்பங்களுக்கு சிறந்த வருமானத்திற்கு வழிவகுக்கும்.

HCL Samuday திட்டத்தின் கீழ் தூத்துக்குடி மாவட்டத்தில் 42,000 வீடுகளில் அடிப்படைக் கணக்கெடுப்பு முடிக்கப்பட்டு, ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் தேவையான திட்டங்கள் அடையாளம் காணப்பட்டு, அவை கிராம வளர்ச்சித் திட்டங்களாகத் தொகுக்கப்பட்டதின் வாயிலாக, கிராம சமூகங்களின் பங்கேற்பை அதிகரிக்க, தொடக்கத் திட்டங்கள் கண்டறியப்பட்டன.

இன்று வரை தூத்துக்குடி மாவட்டத்தில் HCL Samuday-ன் செயல்பாடுகளில் சில முக்கிய வெற்றிகள்:

- 132 தொடக்கப் பள்ளிகளில் சிறந்த கற்றலுக்காக டிஜிட்டல் ஸ்மார்ட் போர்டுகள் பொருத்தப்பட்டுள்ளன.
- டிஜிட்டல் கற்றலுக்காக 20 அங்கன்வாடி மையங்களின் செயல்பாடுகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.
- 58 கிராம ஊராட்சிகளில் தொற்றாத நோய்களுக்கான மேம்பட்ட பரிசோதனை மற்றும் மேலாண்மை செய்யப்பட்டுள்ளன.
- ஐந்து கிராம அளவிலான தையல் மையங்களில் தையல் இயந்திரங்கள் மூலம் சுய உதவிக் குழுக்களில் உள்ள 100 பெண்களுக்குப் பயிற்சி வழங்கி, அவர்களுக்கு வாழ்வாதார வாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.
- ஊட்டச்சத்துக் குறைபாடு மேலாண்மைக்கான சோதனை முகாமில் கண்டறியப்பட்ட ஊட்டச்சத்து குறைபாடுள்ள 41 குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து மருந்துகள் வழங்கப்பட்டன.

# முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட செயல்பாடுகள் குறித்து திடீர் ஆய்வு

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விழுப்புரம் மாவட்டம், மருத்துவமனை வீதி நகராட்சித் தொடக்கப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட செயல்பாடுகள் குறித்து 27.04.2023 அன்று திடீர் ஆய்வு மேற்கொண்டார்கள்.

ஆய்வின் போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நகராட்சி தொடக்கப்பள்ளி மாணவ, மாணவியருக்கு உணவினை பரிமாறினார். ஆசிரியர்கள் மற்றும் குழந்தைகளிடம் உணவு சுவையாக மற்றும் தரமாக உள்ளதா என கேட்டறிந்தார். இத்திட்டத்திற்கு பிறகு மாணவர்களின் வருகை அதிகரித்திருப்பதாக அப்பள்ளி ஆசிரியர்கள் கூறினார்கள்.

தொடர்ந்து, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பள்ளியில் வள வகுப்பறையின் செயல்பாட்டை பார்வையிட்டு, மாணவர்களுக்கு அளிக்கப்படும் கற்றல், கற்பித்தல் முறை, அளிக்கப்படும் பயிற்சிகள், அதற்கான அட்டவணைகள் குறித்தும் ஆய்வு செய்தார்.







## முதலிடம் பெற்ற மாணவிக்கு வாழ்த்து

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை 09.05.2023 அன்று முகாம் அலுவலகத்தில், பன்னிரெண்டாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் சாதனை படைத்த திண்டுகல், அண்ணாமலையார் மில்ஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி செல்வி ச. நந்தினி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

## வெற்றி பெற்ற திருநங்கை மாணவிக்கு வாழ்த்து

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை 10.05.2023 அன்று முகாம் அலுவலகத்தில், கிருஷ்ணவேணி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 337/600 மதிப்பெண்கள் பெற்ற, நாமக்கல் மாவட்டம், பள்ளிப்பாளையத்தைச் சேர்ந்த விசைத்தறி தொழிலாளி திருமதி. ராஜேஸ்வரி அவர்களின் பிள்ளை ஸ்ரேயா (திருநங்கை) அவர்கள் சந்தித்து வாழ்த்து பெற்றார்.





# மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்குதல்

திருவண்ணாமலை மாவட்டத்தில் 12.05.2023 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் 50 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.4.05 கோடி மதிப்பிலான வங்கிக் கடன் இணைப்புகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. செஞ்சி கே.எஸ். மஸ்தான் அவர்கள், மாண்புமிகு துணை சபாநாயகர் திரு. கு.பிச்சாண்டி அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு B. முருகேஷ், இ.ஆ.ப., மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் ஆகியவற்றின் செயல்பாடுகள் ஆய்வு




ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர். ப. செந்தில்குமார், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில், 15.05.2023 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இந்த ஆய்வில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் ஆகியவற்றின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள், அவற்றில் அடைந்துள்ள இலக்குகள், 2023-2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளை நடைமுறைப்படுத்த மேற்கொள்ளப்பட்டு வரும் செயல்பாடுகள் போன்றவை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அரசு முதன்மைச் செயலாளர் அவர்கள் திட்டங்களை விரைந்து முடிக்க உரிய ஆலோசனைகளை வழங்கினார்.

இந்த ஆய்வின் போது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை ஆணையர் மரு. தாரேஸ் அகமது, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள், செயல் இயக்குநர் திருமதி. பா.பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., அவர்கள், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை இயக்கு அலுவலர் திருமதி. ஜெ.இ.பத்மஜா, இ.ஆ.ப., அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் ஆகியவற்றின் கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் பொது மேலாளர் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.




# தமிழ்நாட்டில் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு மற்றும் நிதி உள்ளாக்கம் ஆகியவற்றை செயல் படுத்திட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் பாரத ஸ்டேட் வங்கி இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்

மகளிர் முன்னேற்றத்திற்காக செயல்பட்டு வரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் துணை அமைப்பான தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் (TNSRLM) வழிகாட்டுதலில் மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. அக்குழுக்களின் பொருளாதார சுயசார்பிற்கு வலுசேர்க்கும் வகையில் வங்கிக் கடன் இணைப்புகள் உள்ளிட்ட ஏராளமான கடன் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், தமிழ்நாடு அரசின் 2023-2024ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 30,000 கோடி வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதை செயல்படுத்தி, சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு வழங்கும் இலக்கை எய்திடவும், சுய உதவிக் குழுக்களுக்கு விரைவாக வங்கிக் கடன் இணைப்புகள் பெற்றுத் தந்திடவும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, 10.05.2023 அன்று சென்னை, நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாக கூட்ட அரங்கில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM) மற்றும் பாரத ஸ்டேட் வங்கி இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு, இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்களும், சென்னை வட்ட பாரத ஸ்டேட் வங்கியின் பொது மேலாளர் திரு. நிராஜ் பாண்டா அவர்களும் கையெழுத்திட்டனர். இந்த நிகழ்ச்சியில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி. பா. பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., அவர்கள், பாரத வங்கியின் துணைப் பொதுமேலாளர் திரு. ஜெகதீஸ்வர் கர்ரி அரசு மற்றும் பாரத ஸ்டேட் வங்கியின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மண்டல அளவிலான பயிற்றுநர்களுக்கான பயிற்சி

கிருஷ்ணகிரி அணை, தமிழ்நாடு ஊரக விரிவாக்கப் பயிற்சி மையத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு சார்பாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை உணவுத் திட்டத்தினை செயல்படுத்த கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல் மற்றும் திருப்பத்தூர் ஆகிய 5 மாவட்டங்களில் உள்ள சமையலர்களுக்கு மண்டல அளவிலான பயிற்றுநர்களுக்கான பயிற்சியை கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தீபக் ஜேக்கப், இ.ஆ.ப., அவர்கள் 28.04.2023 அன்று துவக்கி வைத்தார். இந்நிகழ்வின்போது ஊரக வளர்ச்சித் துறை கூடுதல் இயக்குநர் திரு. மகேந்திரன், மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள் திரு. பெரியசாமி, திரு. ஜாகீர் உசேன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகள் ஆய்வு




தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்து அனைத்து மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர்களுடனான ஆய்வுக் கூட்டம் 12.05.2023 அன்று சென்னை, அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்றது,

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த ஆய்வுக் கூட்டத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள், அவற்றில் அடைந்துள்ள இலக்குகள், 2023-2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளை நடைமுறைப்படுத்த மேற்கொள்ளப்பட்டு வரும் செயல்பாடுகள் போன்றவை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வின் போது, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்கள், பொது மேலாளர், அனைத்து மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர்கள், இணை இயக்குநர்கள் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

இந்நிகழ்வின்போது, மதுரை மாவட்ட மகளிர் திட்டத்தின் இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் திரு. எம். காளிதாசன் மற்றும் தென்காசி மாவட்ட மகளிர் திட்டத்தின் இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் கோ.குருநாதன் ஆகியோர் பணி நிறைவு பெறுவதை முன்னிட்டு, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச. திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள் அனைத்து மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர்களின் சார்பில் இணை இயக்குநர்களுக்கு பொன்னாடை அணிவித்து வாழ்த்தினார்.

# மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வட்டி மானியத்துடன் கூடிய கடனுதவி

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம், தமிழ்நாடு கதர் கிராம தொழில் வாரியம் சார்பில் அமைக்கப்பட்டுள்ள பனை மற்றும் காதிகிராப்ட் பொருட்கள் விற்பனை அங்காடியினை திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பா.முருகேஷ், இ.ஆ.ப., அவர்கள் 25.05.2023 அன்று திறந்து வைத்து, முதல் விற்பனையை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வின்போது, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், வட்டார வணிக வள மையம் மூலம் சிவசக்தி மகளிர் சுய உதவி குழுவிற்கு ரூ.50 ஆயிரம் வட்டி மானியத்துடன் கூடிய கடனுதவியினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.



# நிலையான வளர்ச்சி... தொடரட்டும் மகிழ்ச்சி...!

## தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் இரண்டாண்டு சாதனைகள்

மக்கள் நல்வாழ்விற்கும், அவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் ஏராளமான திட்டங்களைத் தீட்டி அவற்றை முறையாக செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சரின் தலையிலான சீர்மிகு ஆட்சியின் சிறப்பான நிர்வாகத்தினால் அரசின் அனைத்துத் துறைகளும் தங்களின் செயல்பாடுகளில் சாதனைகளை படைத்து வருகின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் செயல்படும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் “நன்றே செய் அதுவும் இன்றே செய்” என்னும் முதுமொழிக்கேற்ப ஏழை மக்களின் குறிப்பாக மகளிர் மேம்பாட்டிற்கான பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. தமிழ்நாடு அரசின் “ஈடில்லா ஆட்சி இரண்டாண்டே சாட்சி” என்னும் சொற்றொடருக்கு பெருமை சேர்க்கும் வண்ணம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் இரண்டாண்டு சாதனைகளை அறிந்து கொள்வோம் வாருங்கள்.



### சுய உதவிக் குழுக்கள்

ஒரே பகுதியில் வசிக்கும் 18 முதல் 60 வயதுக்கு உட்பட்ட, 12 முதல் 20 மகளிரை உறுப்பினர்களாக கொண்டு சுய உதவி குழுக்கள் அமைக்கப்படுகின்றன. குழுக்களின் முடிவிற்கேற்ப உறுப்பினர்களிடையே சேமிப்பு மற்றும் தங்களுக்குள்ளேயே கடன் வழங்குதலை ஊக்கப்படுத்துவதே சுய உதவிக் குழுக்களின் முக்கிய நோக்கமாகும். கடந்த இரண்டாண்டுகளில் 4,57,499 உறுப்பினர்களைக் கொண்ட 42,369 சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு

சுய உதவிக் குழு இயக்கத்தினை வலுப்படுத்திடவும், நிலைத்த தன்மையினை அடையச் செய்திடவும், கிராம ஊராட்சியில் உள்ள அனைத்து மகளிர் சுய உதவி குழுக்களையும் ஒருங்கிணைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டம் 1975ன் கீழ் சங்கமாகப் பதிவு செய்யப்படுகின்றன. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் சுய உதவி குழு உறுப்பினர்களின் பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்தும் பொதுவான மையமாக அமைந்துள்ளன.





### நிதி உள்ளாக்கம்

தகுதி உள்ள சுய உதவி குழுக்களுக்கு சுழல் நிதி, சமுதாய முதலீட்டு நிதி மற்றும் நலிவுநிலைக் குறைப்பு நிதி ஆகியவை வழங்கப்படுகிறது. இரண்டாண்டுகளில் சுழல் நிதியாக 35,193 குழுக்களுக்கு 52.78 கோடி ரூபாய், 51,1969 சுய உதவிக் குழுக்களுக்கு 433.92 கோடி ரூபாய் சமுதாய முதலீட்டு நிதி மற்றும் 14.59 கோடி ரூபாய் நலிவுநிலைக் குறைப்பு நிதியாக வழங்கப்பட்டுள்ளன.

### சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு

சுய உதவிக் குழுக்கள் வங்கியில் சேமிப்புக் கணக்கை துவக்குவதின் மூலம் வங்கியுடனாக இணைப்பை ஏற்படுத்திக் கொள்கின்றன. வங்கிகளில் பெறப்படும் கடன்கள் மூலம் சுய உதவி குழுக்களை சேர்ந்த உறுப்பினர்கள் பயனடைந்து வருகின்றனர். கடந்த இரண்டாண்டுகளில் 47,470.37 கோடி ரூபாய் வங்கி இணைப்பு வழங்கப்பட்டுள்ளதன் மூலம் 8,65,086 குழுக்கள் பயனடைந்துள்ளன.





### ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கான பெருங்கடன்

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வங்கிகளிடமிருந்து பெருங்கடன் பெற்று அதனை சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு நுகர்வு மற்றும் வருமானம் ஈட்டக் கூடிய தொழில்களுக்கு கடன்களாக வழங்குகின்றன. வங்கிகளிடமிருந்து சுய உதவி குழுக்கள் பெற்று வரும் கடன் அளவு போதுமானதாக இல்லாததால், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் பெறும் கடன்கள் கூடுதல் நிதி ஆதாரமாக பயன்படுகிறது.

## வாழ்வாதார மேம்பாடு

வாழ்வாதார மேம்பாடு என்பது சுய அல்லது வேலை வாய்ப்பை உள்ளடக்கிய பொருளாதார நடவடிக்கைகளை உள்ளடக்கிய வளர்ச்சி அடிப்படையிலான தலையீடுகளின் தொகுப்பாகும். பெண்கள் மற்றும் அவர்கள் வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமான ஆதாரங்களை உருவாக்குவதற்கு இயற்கை வளங்களை பயன்படுத்துவதன் மூலம் வாழ்வாதார மேம்பாடு நடைமுறைப்படுத்தப்படுகிறது

### உற்பத்தியாளர் குழுக்கள்

ஒரே ஊராட்சியை சேர்ந்த ஒரே மாதிரியான பொருட்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள 15-20 பெண் விவசாயிகளை ஒரே குழுவாக திரட்டி உற்பத்தியாளர் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. இதுவரை, 11,597 உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.





### இயந்திர வாடகை மையம்

இயந்திர வாடகை மையம் என்பது வெவ்வேறு பயிர்களுக்குத் தேவையான விவசாயக் கருவிகள் மற்றும் இயந்திரங்களை ஒரே இடத்தில் கிடைக்கச்செய்து விவசாயப் பணிகளுக்கு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட நியாயமான வாடகைக்கு கொடுப்பது ஆகும். இதுவரை 33 மாவட்டங்களில் 252 இயந்திர வாடகை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### இயற்கை பண்ணையம் தொகுப்புகள்

இயற்கை பண்ணையம் என்பது பயிர்கள் மற்றும் கால்நடைகளை ஒருங்கிணைக்கும் இரசாயனமற்ற வேளாண்-சூழலியல் விவசாய முறையாகும். சான்றிதழின் மூலம் அதிக சந்தை விலைக்கு திரட்டுதல் மற்றும் தரப்படுத்தலை தொகுப்பு அணுகுமுறை ஊக்குவிக்கிறது. இதுவரை, 212 இயற்கை தொகுப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.





### மதி அங்காடி (Mathi KIOSK)

சுய உதவி குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்வதற்காக நகர்ப்புற பகுதிகள், குறிப்பாக சுற்றுலா இடங்கள், பேருந்து நிலையங்கள், கோயில்கள், அரசு அலுவலகங்கள் மற்றும் இதர நிறுவனங்கள் போன்ற இடங்களில் 154 மதி அங்காடிகள் நிறுவப்பட்டுள்ளன.

### பூமாலை வணிக வளாகங்கள் :

மகளிர் சுய உதவிக் குழு பொருட்களின் உற்பத்திப் பொருட்களை மாவட்டத் தலைநகரங்களில் காட்சிப்படுத்தி விற்பனை செய்ய ஏதுவாக மாவட்ட வணிக வளாகங்கள் கட்டப்பட்டன. இவ்வணிக வளாகங்களுக்கு, முன்னாள் முதல்வர் டாக்டர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் கருணாநிதி அவர்களால் "பூமாலை வணிக வளாகம்" என பெயர் சூட்டப்பட்டு செயல்பட்டு வருகின்றன.






### மாநில அளவிலான கண்காட்சிகள்:

தமிழ்நாட்டின் தலைநகரமான சென்னையில் மகளிர் சுய உதவிக்குழு பொருட்களின் உற்பத்திப் பொருட்களை காட்சிப்படுத்தி விற்பனை செய்ய ஏதுவாக அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் கோடைக் கொண்டாட்டம், பொங்கல் மற்றும் புத்தாண்டு கண்காட்சி, தீபாவளி மற்றும் நவராத்திரி என ஆண்டிற்கு மூன்று முறை கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.



**சாராஸ்**

சாராஸ்(SARAS)என்பதுஅனைத்துமாநிலங்களைச்சேர்ந்தஊரககைவினைஞர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் தேசிய அளவிலான கண்காட்சி ஆகும். வருடந்தோறும் பல்வேறு மாநிலங்களில் நடைபெறும் இக்கண்காட்சியில் நாடு முழுவதிலிருந்தும் சுய உதவி குழுக்களைச் சார்ந்த கைவினைஞர்கள் உற்பத்தி செய்த கைவினைப் பொருட்கள் பார்வைக்கும் விற்பனைக்கும் வைக்கப்படுகிறது.

**கல்லூரி சந்தைகள்**



இளம் தலைமுறை மத்தியில் மகளிர் தொழில் முனைவோர் மற்றும் மகளிர் சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களை பிரபலபடுத்தும் வண்ணம் வருடத்திற்கு சுமார் 150 கல்லூரிகளில் கல்லூரிச் சந்தை என்ற பெயரில் குறைந்தபட்சம் 2 நாட்கள் அதிகபட்சம் 5 நாட்கள் என கண்காட்சிகள் நடத்தப்பட்டு மகளிர் சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

## கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு மூலம் சமூக செயல்பாடுகள்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் அதன் திட்டங்களின் சேவைகள் மற்றும் பலன்களை மேம்படுத்துவதற்கான உள்ளமைக்கப்பட்ட வழிமுறையைக் கொண்டுள்ளது. இந்த ஒருங்கிணைப்பு முயற்சிகள் நிலையான வளர்ச்சி இலக்குகளை (SDGs) அடைவதில் அதிக கவனம் செலுத்துகின்றன.

**சமூக உள்ளாக்கம் மற்றும் சமூக மேம்பாடு**



நலிவுற்றவர்கள் மற்றும் விடுபட்ட இலக்கு மக்களின் குடும்பங்களை அடையாளம் காணவும் அணிதிரட்டவும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள், பழங்குடியினர், சிறுபான்மையினர் மற்றும் பிற பாதிக்கப்படக்கூடிய மக்களைக் கொண்டு சிறப்பு சுய உதவிக்குழுக்கள் உருவாக்கப்படுகின்றன. முதியோர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநங்கைகளின் சிறப்புத் தேவைகளைக் கண்டறிய, வட்டார அளவில் தேவைகள் கண்டறியும் முகாம்கள் நடத்தப்பட்டு, பல்வேறு அரசுத் திட்டங்களின் தகுதியான திட்டப் பயன்கள் தாழ்த்தப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினருக்கு கிடைக்க வழிவகை செய்யப்படுகிறது.



**மக்களைத் தேடி மருத்துவம் (MTM):**

மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் தமிழ்நாட்டில் தொற்றா நோய்களை பரிசோதிப்பதற்காக தேசிய சுகாதார இயக்கத்தின் கீழ் சுகாதார துறையுடன் ஒருங்கிணைந்து 388 வட்டாரங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் முறையே 8,713 மற்றும் 2,256 மகளிர் சுகாதார தன்னார்வலர்கள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அடையாளம் காணப்பட்டு சுகாதாரத் துறையால் பயிற்சி அளிக்கப்பட்ட சுய உதவி குழு பெண்கள் துணை சுகாதார மையங்களுடன் (HSC) இணைக்கப்பட்டுள்ளனர். மகளிர் சுகாதார தன்னார்வலர்கள் நீரிழிவு நோயாளிகள் மற்றும் இரத்த அழுத்தம் உள்ள நோயாளிகளை பரிசோதித்து, அவர்களுக்கு சிகிச்சைக்காக ஆலோசனை வழங்குவதோடு, நாள்பட்ட நோயாளிகளுக்கு மருந்துகளையும் வழங்குகிறார்கள்.

**முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் (CMBFS):**



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 06.05.2022 அன்று சட்டமன்றத்தில் சட்டப்பேரவை விதி எண் 110-ன் கீழ் ஆரோக்கியமான வருங்கால சந்ததியினரை உருவாக்குவதற்காக அரசு தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலை, மேல்நிலை பள்ளி (ம) ஆதிதிராவிடர் நலத்துறை பள்ளிகளில் பயிலும் 1 முதல் 5 ஆம் வகுப்புவரை பயிலும் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு, 15.09.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கிராமப்புறம் மற்றும் நகர்புரங்களில், சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் மூலம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஒருங்கிணைப்புடன் முதற்கட்டமாக 16 மாவட்டங்களில் (17 வட்டாரங்கள் 346 கிராம ஊராட்சிகளில் உள்ள 963 பள்ளிகளில் உள்ள மையங்கள்) அரசு பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் தொடங்கப்பட்டது.

இக்கல்வியாண்டு (2023-2024) முதல் மாநிலத்தில் உள்ள 27,468 அரசு தொடக்கப் பள்ளிகளுக்கும் "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்" விரிவுபடுத்தப்பட உள்ளது. 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கும் 15,01,042 மாணவர்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டத்திற்கு ரூ.500 கோடி பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.







### பாலின வன்முறைக்கு எதிரான பிரச்சாரம்

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்காக, பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பிற்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு 25 நவம்பர் 2022 முதல் 23 டிசம்பர் 2022 வரை ஒரு மாத கால பிரச்சாரம் ஏற்பாடு செய்யப்பட்டது. இப்பிரச்சாரம் மாநிலம் முழுவதும் உள்ள ஒவ்வொரு ஊராட்சிகளிலும் நடத்தப்பட்டது. சுவரொட்டிகள் மற்றும் விழிப்புணர்வு பதாதைகள், மனித சங்கிலி பேரணிகள், குறும்படங்கள், திரைப்படங்கள் திரையிடல், கையெழுத்து இயக்கம், மெழுகுவர்த்தி ஏந்தி ஊர்வலம் செல்லுதல், ரங்கோலிப்போட்டி மூலமும், பள்ளி, கல்லூரிகளில் பெண்கள் உரிமைகள் பற்றிய விவாதங்கள் ஆகியவை மாதம் முழுவதும் நடைபெற்றது.

### தீன்தயாள் உபாத்தியாய கிராமப்புறத் திறன் பயிற்சித் திட்டம் (DDU-GKY)

'தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா' திட்டத்தின் மூலம் பணியமர்வுடன் கூடிய தொழிற்பயிற்சிகள் ஊரகப் பகுதிகளில் உள்ள இளைஞர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. சுகாதாரம், தகவல் தொழில்நுட்ப சேவை, ஆயத்த ஆடை வடிவமைப்பு, ஓட்டுநர், ஆட்டோமொபைல், விருந்தோம்பல், வெல்டிங், கட்டுமானம் போன்ற துறைகளில் பெரும்பான்மையான திறன் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

DDU-GKY
Deen Dayal Upadhyaya Grameen Kaushalya Yojana
Empowering India • Powering the World

தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய யோஜனா திட்டத்தின் கீழ் மாவட்ட அளவிலும், வட்டார அளவிலும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மாவட்ட இயக்க மேலாண்மை அலகுகளால் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. முகாம்கள் நடைபெறும் பொழுது தேவையான விவரங்களை வேலை தேடி வருபவர்களுக்கு வழங்கி அவர்களது கல்வித் தகுதி மற்றும் விருப்பத்தின் அடிப்படையில் சரியான வேலையினை தேர்வு செய்வதற்கு ஆலோசனை வழங்கப்படுகிறது.




388 வட்டார அளவிலான இளைஞர் திறன் திருவிழாக்கள் நடத்தப்பட்டு, 1.62 இலட்சம் இளைஞர்கள் பங்கேற்று, அதில் 56,418 இளைஞர்களுக்கு பல்வேறு திறன் பயிற்சித் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு, திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. பெரும் நிறுவனங்களுடன் இணைந்து மாவட்ட அளவில் மற்றும் வட்டார அளவில் 2,449 வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, 4,07,007 இளைஞர்களுக்கு நேரடி வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இளைஞர் திறன் பயிற்சித் திட்டம், ப்ராஜெக்ட் லைப், உன்னதி, அஜீவிகா போன்ற திறன் பயிற்சித் திட்டங்கள் மூலம் 1,10,496 இளைஞர்களுக்கு திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு, இளைஞர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட்டுள்ளது.

கட்டாய பணியமர்வுடன் கூடிய திறன் பயிற்சித் திட்டமான தீன்தயாள் உபாத்தியாய திறன் பயிற்சித் திட்டத்தின் கீழ் இதுவரை 54,994 கிராமப்புற இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, 31,972 இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற்று பயனடைந்துள்ளனர்.






சுய வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் நோக்கில் ஊரக சுய வேலை வாய்ப்புப் பயிற்சி நிறுவனங்களின் இதுவரை 2,55,604 இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு, 1,90,276 பயனாளிகளுக்கு சுய வேலை வாய்ப்பு பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் 81,953 இளைஞர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டு, 53,269 இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற்று பயனடைந்துள்ளனர்.

### தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் (TNLUM)

இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது நகர்ப்புரங்களில் பின்தங்கிய மற்றும் ஏழை குடும்பங்களுக்கு வலுவான நிறுவன அமைப்புகளை உருவாக்கித் தருவதன் மூலம் அவர்களின் நிலையான வாழ்வாதாரத்தை அடிமட்ட நிலையிலிருந்து லாபம் தரக்கூடிய வகையில் சுய வேலை மற்றும் திறன் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தி அதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரம் மேம்பட உறுதி செய்கிறது.

நகர்ப்புர உறைவிடமற்றோருக்கு அடிப்படை வசதிகளுடன் கூடிய உறைவிடத்தை படிப்படியாக உயர்த்தித் தருவது, மேலும் நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கு சந்தை வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கு உதவும் வகையில் நிதி ஆதாரங்களின் மூலம் கடன், சமூக பாதுகாப்பு மற்றும் திறன் வளர்ப்பின் மூலம் வளர்ந்து வரும் சந்தை வாய்ப்புகளை பயன்படுத்திக் கொண்டு அவர்களின் வாழ்வாதாரம் மேம்பட உதவுவது போன்றவை இத்திட்டத்தின் நோக்கமாகும்.



தமிழ்நாடு முழுவதும் நகர்ப்புர ஏழை மக்களின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காக 40,952 புதிய சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 38,953 சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 38.95 கோடி சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது.

சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை ஒருங்கிணைக்க புதிதாக 861 பகுதி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் 10 நகர அளவிலான கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 712 பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு 3.56 கோடி ரூபாய் சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது.




சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் தொழில் தொடங்க 16,182 தனி நபர்களுக்கு 80.84 கோடி ரூபாயும், 9,398 குழுக்களுக்கு ரூ. 311,52 கோடி ரூபாயும் வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது. நகர்ப்புரங்களில் செயல்படும் 72,964 சுய உதவிக் குழுக்களுக்கு 3278.32 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 27,865 நகர்ப்புர ஏழை இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு, ரூபாய் 62.15 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

### வாழ்ந்து காட்டுவோம் திட்டம் (VKP)

வாழ்ந்து காட்டுவோம் திட்டம் என்பது உலக வங்கி நிதியுதவியுடன் தமிழக அரசால் செயல்படுத்தப்படும் வறுமை ஒழிப்பு மற்றும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டமாகும். சுய உதவிக் குழு மகளிர் தலைமையிலான கிராமப்புற நிறுவனங்கள் மூலம் கிராமப்புறங்களில் நிலையான தொழில் நிறுவனங்களை உருவாக்குவதன் மூலம் கிராமப்புற சுய உதவிக்குழு மகளிரை மேம்பாடடையச் செய்வதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் 31 மாவட்டங்களில் (சென்னை, தஞ்சாவூர், அரியலூர், பெரம்பலூர், தர்மபுரி, கன்னியாகுமரி மற்றும் திருப்பத்தூர் தவிர) 120 ஒன்றியங்களில் உள்ள 3994 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாட்டிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியங்களில் ஊரகத் தொழில் முனைவுகளை உருவாக்குதல், நிதி சேவைகளுக்கு வழிவகுத்தல் மற்றும் வேலைவாய்ப்பினை உருவாக்குதல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் ஆகும்.



### உற்பத்தியாளர் குழுக்கள்

ஒரு குறிப்பிட்ட பண்டத்தின் 30 முதல் 150 உற்பத்தியாளர்கள், பொருளாதார அளவின் காரணமாக சிறந்த வருவாயைப் பெறுவதற்காகவும் உற்பத்திப் பொருட்களை ஒருங்கிணைக்கவும் உற்பத்தியாளர் குழுக்கள் ஏற்படுத்தப்படுகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில் 5000 உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கப்பட்டு, அவற்றில் 3235 உற்பத்தியாளர் குழுக்களுக்கு ரூ. 24.26 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

### தொழிற்குழுக்கள்

10 முதல் 30 உறுப்பினர்கள் கூட்டு உரிமை மற்றும் வணிக நடவடிக்கைகளின் மீது பகிரப்பட்ட வளங்கள் மற்றும் லாபத்துடன் கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளனர், பொருளாதார மேம்பாட்டிற்காகவும், உற்பத்தி செலவைக் குறைக்கவும், தரத்தை மேம்படுத்தவும் மற்றும் வருவாயை அதிகரிக்கவும் ஒன்றுபடுகின்றனர். கடந்த இரண்டு ஆண்டுகளில் 1000 தொழிற்குழுக்கள் உருவாக்கப்பட்டு, 760 தொழிற்குழுக்களுக்கு தொடக்க நிதியாக ரூ. 6.70 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.



### உற்பத்தியாளர் கூட்டமைப்புகள்

இது ஒருங்கிணைத்தல், மதிப்பு கூட்டுதல், சந்தைப்படுத்துதல் மற்றும் சேவையை வழங்குதல் ஆகியவற்றிற்காக உற்பத்தியாளர் குழுக்களின் முறையான உயர்நிலை ஒருங்கிணைப்பு ஆகும். உரிய தகுதிகளை எய்தியதற்குப் பின் இக்கூட்டமைப்புகளுக்கு துவக்க நிதி வழங்கப்படுகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில் 53 உற்பத்தியாளர் கூட்டமைப்புகளுக்குத் துவக்க நிதியாக ரூ. 7.04 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.



### சமுதாயத் திறன் பள்ளிகள் (CSS)

உள்ளூர் தேவைகள் மற்றும் திறன் இடைவெளிகளை பகுப்பாய்வு செய்து, கிராமத்தில் உள்ள பாரம்பரிய மற்றும் உள்ளூர் தொழில்கள், இத்திட்டத்தால் கண்டறியப்படுகின்றன. ஆர்வமுள்ள இளைஞர்கள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் கண்டறியப்பட்டுத் திறன் பயிற்சி பெற தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இரண்டு ஆண்டுகளில் 1653 சமுதாயத் திறன் பள்ளிகள் அமைக்கப்பட்டு, 35,079 கிராமப்புற இளைஞர்களுக்கு ரூ.12.39 கோடியில் திறன் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.



### சமுதாயப் பண்ணைப் பள்ளிகள் (CFS)

பயிற்சி பெற்ற முன்னோடி விவசாயிகள் (SPARK)கள் மூலம், உற்பத்தியாளர்களுக்குச் சமுதாயப் பண்ணைப் பள்ளிகள் மூலம் செயல் விளக்கத் தரைகளுடன் (Demo Plot) செயல் விளக்கம் அளிக்கப்படுகின்றன. உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த தொழில்நுட்பங்களில் பயிற்சி 3 முதல் 12 மாதங்களுக்கு பயிர்களின் தன்மைக்குத் தகுந்தவாறு அளிக்கப்படுகின்றது. இப்பள்ளிகளுக்கு ரூ. 70,000 முதல் ஒரு இலட்சம் வரை முன்னோடி விவசாயிகளுக்கு மதிப்பூதியமாகும். பயிற்சிப் பொருட்களுக்கும், செயல்விளக்கத் தரைகளுக்கும் வழங்கப்படுகின்றன.




மகளிர் மேம்பாட்டிற்காக அயராது செயல்பட்டு வரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றின் ஆக்கப்பூர்வமான பணிகளால் சுய உதவி குழு மகளிர் அனைத்துத் துறைகளிலும் முன்னிலைப் பெற்று வருகின்றனர் என்பது நம் அனைவருக்கும் பெருமை அளிக்கும் செய்தியாகும்.

## மண்ணால் செய்யப்படும் பொம்மைகள் மற்றும் கைவினைப் பொருட்கள்

விழுப்புரம் மாவட்டம், கோலியனூர் ஊராட்சி ஒன்றியம், சாலை அகரம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உள்ள தென்றல் மகளிர் சுய உதவிக்குழு மற்றும் தென்னமாதேவி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உள்ள மகளிர் முன்னேற்ற சங்க சுய உதவிக் குழு (MMS-6) ஆகிய குழுக்களின் உறுப்பினர்கள் களிமண்ணில் பல்வேறு பொம்மைகள், கைவினைப் பொருட்கள், வீட்டு உபயோகப் பொருட்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்களைத் தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர்.





2016ஆம் ஆண்டு துவக்கப்பட்ட தென்றல் மகளிர் சுய உதவிக் குழுவானது மகளிர் திட்ட சமுதாய முதலீட்டு நிதி, வங்கிக் கடன் ரூ.2 இலட்சம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்ட நிதி ரூ.1.50 இலட்சம் பெற்று தங்களின் தொழிலை விரிவுபடுத்தி வருகின்றனர்.

2005ஆம் ஆண்டு துவக்கப்பட்ட தென்னமாதேவி மகளிர் முன்னேற்ற சங்க சுய உதவிக் குழு (MMS-6) வங்கிக் கடன் ரூ.2 இலட்சம் மற்றும் சமுதாய முதலீட்டு நிதி உதவி பெற்று தங்கள் தொழிலை மேம்படுத்தி வருகின்றனர்.

ஆரம்பத்தில் சுடுமண் மூலமாக பொம்மைகள் செய்து விற்பனை செய்து வந்த இக்குழுக்கள் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனம் (RSETI) மூலமாக பயிற்சி பெற்று கலைநயமிக்க பல்வேறு வண்ணங்களில் மண்பாண்ட பொம்மைகள் மற்றும் கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்து உள்ளூர் மட்டுமல்லாமல் பிற மாநிலங்களுக்கும் விற்பனை செய்வதோடு, ஆஸ்த்ரேலியா, கனடா மற்றும் லண்டன் போன்ற வெளிநாடுகளுக்கும் தங்களின் தயாரிப்புப் பொருட்களை ஏற்றுமதி செய்கின்றனர்.

இக்குழுக்கள் தயார் செய்யும் பொம்மைகள் மற்றும் கைவினைப் பொருட்களுக்கு மகளிர் திட்டத்தின் வாயிலாக உள்ளூரிலும், மாநில அளவில் விற்பனை கண்காட்சியிலும் மற்றும் பிற மாநிலங்களில் நடத்தப்படும் சாராஸ் உள்ளிட்ட கண்காட்சியிலும், விற்பனை வாய்ப்புகள் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது.

தற்போது இக்குழுக்களின் உறுப்பினர்கள் மாதந்தோறும் கணிசமான வருவாய் பெற்று பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைந்து வருகின்றனர். தங்களின் வாழ்வாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு தென்றல் மகளிர் சுய உதவிக் குழு மற்றும் மகளிர் முன்னேற்ற சங்க சுய உதவிக் குழு 6 (MMS-6) ஆகிய சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



# எனக்கு கிடைத்த பணி வாய்ப்பு...

திருவாரூர் மாவட்டம், கீரங்குடி கிராமத்தில் வசித்து வரும் என் பெயர் திலீப் (வயது 21). 12ஆம் வகுப்பு வரை படித்துள்ள நான், தனியார் கல்லூரியில் பொறியியல் படித்து முடித்த பிறகு வேலை இல்லாமல் மிகவும் சிரமப்பட்டேன். அப்போதுதான் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் செயல்தீனதயாள் உபாத்தியாய கிராமப்புற திறன் பயிற்சித் திட்டத்தின் (DDU-GKY) மூலம் Capital Educational and Charitable Trust நிறுவனத்தில் வேலை உத்திரவாதத்துடன் பயிற்சி அளிப்பதை அறிந்தேன். உடனடியாக எனது கல்வி சான்றுகளுடன் அந்த நிறுவனத்தை அணுகினேன். எனது சான்றுகளை சரிபார்த்த பிறகு உறைவிட வசதியுடன் கூடிய பயிற்சியில் சேர்ந்தேன். பயிற்சி முடிந்தவுடன் பெருங்குடியில் உள்ள Mi-Tech Bus Doors எனும் நிறுவனத்தில் CNC – Setter Cum Operator பணியில், மாதம் ரூபாய் 22,000 ஊதியத்தில் நிரந்தர பணியில் அமர்த்தப்பட்டேன்.



எனக்கு கிடைத்த பணி வாய்ப்பினால், என் ஊதியத்தை ஒரு பகுதியை என் குடும்பத்திற்கு அனுப்பி வைக்க முடிகிறது. நான் இப்போது மிகுந்த மகிழ்ச்சியில் உள்ளேன். என் நண்பர்கள் பலருக்கு தீனதயாள் உபாத்தியாய கிராமப்புற திறன் பயிற்சித் திட்டம் குறித்தும், அவற்றின் மூலம் பல்வேறு நிறுவனங்களில் தரும் பயிற்சிகள் குறித்தும் தெரிவித்து உள்ளேன். அதில் ஒரு சிலர் பயிற்சியில் சேர்ந்து உள்ளனர். இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கும், தீனதயாள் உபாத்தியாய கிராமப்புறத் திறன் பயிற்சித் திட்டத்திற்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- திலீப்

# தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு நன்றி...



என் பெயர் வினோதினி மணிவண்ணன். பெரம்பலூர் மாவட்டம், பாடாலூர் கிராமத்தில் கடந்த 25 ஆண்டுகளாக குடும்பத்துடன் வசித்து வருகிறேன். என் கணவர் எலக்ட்ரிசியன் வேலை செய்து வந்தார். எனது மகள் MBA படித்துள்ளார். எனது மகன் BE படித்து வருகிறார். நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த நான், என் கணவரின் குறைந்த அளவு வருவாயைக் கொண்டு குடும்பத்தை சிரமத்துடன் நடத்தி வந்தேன். இந்நிலையில் இருந்து மாறுவதற்கும், வாழ்வாதாரத்தை பெருக்குவதற்கும் சுய தொழில் செய்து வருமானம் ஈட்டலாம் என்ற எண்ணமும் விடாமுயற்சியும் என்னுள் ஏற்பட்டது.

இந்நிலையில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் இயங்கும் இசையருவி மகளிர் சுய உதவிக் குழுவில் சேர்ந்தேன். அக்குழுவில் இருந்து வங்கி நேரடிக் கடன் பெற்று அதனுடன் நண்பர்களிடம் சிறிது கடன் பெற்று, அதில் தையல் இயந்திரம் வாங்கி கிராமத்தில் உள்ள பெண்களுக்குத் துணி தைத்து தந்து வருமானம் ஈட்டி வந்தேன். ஆனாலும் போதுமான வருவாய் கிடைக்கவில்லை. ஆகையால் அழகு நிலையம் வைத்து வருமானம் ஈட்டலாம் என்று தோன்றியது.

அச்சமயத்தில் பெரம்பலூர் IOB வங்கியின் (RESTI) கிராமப்புற சுய வேலை வாய்ப்பு பயிற்சி நிறுவனத்தின் மூலம் அழகு கலை சம்பந்தமான பயிற்சி பெற்றேன். தற்பொழுது பாடாலூர் ஊராட்சியிலேயே சிறிய அளவில் பெண்களுக்கான அழகு நிலையம் மற்றும் தையல் கடை நடத்தி வருகிறேன். எனவே, தொழிலை மேம்படுத்த ஆலத்தூர் வட்டார வணிக வள மையத்தின் மூலம் குறைந்த வட்டியில் ரூ.50,000/- சமுதாய தொழில் நிதி பெற்று, அதனைக் கொண்டு, அழகு நிலையத்திற்குத் தேவையானப் பொருட்கள் மற்றும் தையல் தொழிலுக்குத் தேவையான உபகரணங்களை வாங்கி தற்போது எனது தொழிலை நல்ல முறையில் நடத்தி வருகிறேன். தற்பொழுது நான் மாதம் ரூ.25,000/- முதல் ரூ.30,000/- வரை வருமானம் ஈட்டி, குடும்ப செலவுகள் மற்றும் படிப்புச் செலவிற்கு போக மீதி மாதம் ரூ.5,000/- வரை சேமித்து வருகிறேன். எனது வாழ்வாதார வளர்ச்சிக்கு உதவிய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நன்றிகளைத் தொ வித்துக் கொள்கிறேன்.

- வினோதினி மணிவண்ணன்

# புதுக்கோட்டை மாவட்ட மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் தரமான பொருட்கள்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், தரமான பொருட்கள் பலவற்றை தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர். சுய உதவிக் குழுக்களின் தயாரிப்பு பொருட்களை அனைவரும் அறிந்து கொள்ளவும், அவற்றிற்கான சந்தை வாய்ப்புகளை அதிகரித்திடவும் மாதந்தோறும் முற்றம் இதழில் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்கள் குறித்த விபரங்கள் வெளியிடப்படுகின்றன.

## புதுக்கோட்டை மாவட்டம்

| சுய உதவிக் குழுவின் பெயர் | தயாரிப்புப் பொருளின் பெயர் | |
|---|---|---|
| நாகவல்லி மகளிர் சுய உதவிக் குழு,<br>புதுக்கோட்டை மாவட்டம்.<br>கைபேசி : 87548 12060 | குறிப்பேடுகள், நோட்டுப் புத்தகங்கள் |  |
| வேலு நாச்சியார் மகளிர் சுய உதவிக் குழு,<br>புதுக்கோட்டை மாவட்டம்.<br>கைபேசி : 72990 60342 | சணலில் தயாரித்த பரிசுப் பொருட்கள் |  |
| அன்பு மலர் மகளிர் சுய உதவிக் குழு,<br>புதுக்கோட்டை மாவட்டம்.<br>கைபேசி : 99416 90395 | கைவினைப் பொருட்கள் |  |
| பாரத மாதா மகளிர் சுய உதவிக் குழு,<br>புதுக்கோட்டை மாவட்டம்.<br>கைபேசி : 88385 06562 | சுடுமண் கைவினைப் பொருட்கள் |  |
| மலர்கள் மகளிர் சுய உதவிக் குழு,<br>புதுக்கோட்டை மாவட்டம்.<br>கைபேசி : 91763 32902 | வீட்டுத் தயாரிப்பு சாக்லேட் |  |

DDU-GKY
Deen Dayal Upadhyaya
Grameen Kaushalya Yojana
Empowering India • Powering the World

## மகளிர் வாழ்வாதாரம் தொடர்பான

# வாய்ப்புகள், நலத்திட்டங்கள், நிதி உதவிகள்

**மற்றும் ஊரக நகர்ப்புர இளைஞர்களுக்கான திறன்
பயிற்சிகள் குறித்த வழிகாட்டுதல்கள் பெறவும்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ்
செயல்படும் திட்டங்கள் குறித்து ஆலோசனைகள் மற்றும் புகார்கள்
தெரிவிக்கவும் கீழ்கண்ட தொலைபேசி எண்ணை அழைக்கவும்.**

## வாழ்வாதார உதவி அழைப்பு எண்

# 155 330

## LIVELIHOOD HELPLINE NUMBER

அனைத்து வேலை நாட்களிலும், காலை 09.30 மணி முதல் மாலை 06.30 மணிவரை தொடர்பு கொள்ளலாம்.



**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்**
அன்னை தெரசா மகளிர் வளாகம், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034 | 044-28173415, ugkytn2016@gmail.com

# ஜெய்குரு மகளிர் சுய உதவிக் குழு பெற்ற வெற்றி

அரியலூர் மாவட்டம், அரியலூர் நகராட்சி மேல அக்ரஹாரம் பகுதியில் ஜெய்குரு மகளிர் சுய உதவிக் குழு 2013 ஆம் ஆண்டு முதல் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இக்குழுவில் உறுப்பினர்களாக உள்ள 12 நபர்களும் சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா வங்கியில் சேமிப்புக் கணக்கு துவங்கி சேமித்து வருகின்றனர்.

ஜெய்குரு மகளிர் சுய உதவிக் குழு தொடங்கிய போது, அக்குழுவில் உள்ள உறுப்பினர்கள் அனைவரும் எவ்வித தொழில் நடவடிக்கையிலும் ஈடுபடாமல் தங்களது வீட்டு வேலைகளை மட்டும் பார்த்து வந்தனர். ஒவ்வொரு வாரமும் கூட்டம் நடத்தி குழு தொடர்பாகவும் மற்றும் சமூகம் தொடர்பாகவும் கலந்து ஆலோசித்து வந்தனர். அதன் தொடர்ச்சியாக அவர்களுக்கும் பொருளாதார அடிப்படையில் முன்னேற வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அதன் முதற்கட்டமாக குழுவில் உள்ள அனைவரும் சேர்ந்து தொழில் தொடங்க முடிவெடுத்து, தொழில் செய்ய மூலதனமாக குழுவில் உள்ள சேமிப்பு தொகையை உள்கடனாக பெற்று முதலில் 2 நபர்கள் பின்னல் ஒயர்கூடை தயாரிக்க மூலப்பொருட்கள் வாங்கி ஒயர்கூடை தயாரித்து வியாபாரம் செய்தனர்.

அவர்களை தொடர்ந்து மேலும் 4 நபர்கள் தையல் தொடர்பான பயிற்சி பெற்று தையல் தொழில் செய்ய ஆரம்பித்தனர். அக்குழுவிற்கு முதல் வங்கிக் கடனாக ரூ.2,00,000/- பெறப்பட்டு அதனை கொண்டு தையல் தொழில் செய்யும் நபர்கள் தையல் இயந்திரம் வாங்கினர்.

பிறகு 2 நபர்கள் ஜெராக்ஸ் கடையும், 2 நபர்கள் ரப்பர் ஸ்டாம்ப் செய்யும் தொழிலும், 2 நபர்கள் அலங்கார வளையல் செய்யும் தொழிலும் மேற்கொண்டு வங்கி கடன் இணைப்பு மற்றும் சொந்த பங்களிப்பை மூலதனமாகக் கொண்டு தொழில் செய்து வருவாய் பெற்று வருகின்றனர்.

நாளது வரை அக்குழு உறுப்பினர்கள் 6 வங்கி கடன் இணைப்பு பெற்று உள்ளனர். அவர்கள் பெற்ற கடன் தொகையை அவர்களது தொழிலுக்கு மூலதனமாக பயன்படுத்தி அவர்களது தொழிலை விரிவுப்படுத்தி கொண்டனர். இக்குழுவின் உறுப்பினர்கள் தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவது மட்டுமல்லாமல் சமூக முன்னேற்றம் சார்ந்த செயல்பாடுகளான கொரோனா பேரிடர் காலத்தில் கபசுர குடிநீர், முகக்கவசம் வழங்குதல் மற்றும் முதியோர் இலத்திற்கு உணவு வழங்குதல் தொடர்பான சேவைகளையும் செய்து வருகின்றனர்.

இக்குழுவின் சிறப்பான செயல்பாடுகள் மற்றும் குழு உறுப்பினர்களின் தொழில் நடவடிக்கைகள், அவர்களின் பொருளாதார வளர்ச்சி போன்றவற்றினை கருத்தில் கொண்டு, அவர்களுக்கு மேலும் ஊக்கமளிக்கும் வகையில் இக்குழுவிற்கு மணிமேகலை விருது வழங்கப்பட்டுள்ளது.





# திருநங்கையரின் வாழ்வில் மாற்றம்...



நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் நகராட்சி, காந்தல் பகுதியில் வசித்து வந்த திருநங்கைகளாகிய நாங்கள், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் நீலகிரி மாவட்ட திருநங்கைகள் மகளிர் சுய உதவிக் குழுவினை 2020 ஆம் ஆண்டு ஆரம்பித்து, மத்திய கூட்டுறவு நகர வங்கியில் சேமிப்புக் கணக்கு துவங்கினோம். எங்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு மகளிர் திட்ட இயக்குநர் அவர்களின் சீரிய முயற்சியால் உதகமண்டலம் நகராட்சி சேரிங்கிராஸ் பகுதியில் ஆவின் பாலகம் அமைத்துத் தரப்பட்டது. இத்தொழிலின் மூலமாக எங்களது வாழ்வாதாரம் மாற்றம் அடைந்து, சமுதாயத்தில் எங்களுக்கென ஒரு அங்கீகாரம் கிடைத்துள்ளது.

எங்களுக்கு உதவிய தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கும், ஸ்ரீ சங்கமம் பகுதி அளவிலான கூட்டமைப்பிற்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

- நீலகிரி மாவட்ட திருநங்கைகள் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள்

# நிரந்தர வருமானம் கிடைக்கச் செய்த வாழ்வாதார இயக்கம்




என் பெயர் வாசுகி, (க/பெ. செல்வராஜ்) நான் மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5ல் உள்ள தியாகராஜன் நகரில் வசித்து வருகிறேன். மிகவும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த நான், எனது கணவரின் வருமானத்தைக் கொண்டு எனது 2 குழந்தைகளுடன் மிகவும் சிரமத்துடன் வாழ்ந்து வந்தேன்.

எனக்கு பூ கட்டும் வேலை நன்றாகத் தெரியும். எனவே, நான் வசிக்கும் இடத்தில் உள்ள பூக்கடையைச் சேர்ந்த கடைக்காரர் உதிரிப் பூக்களைக் கட்டக் கொடுப்பார். அப்பூக்களை பெண்கள் விரும்பும் வகையில் அழகாக கட்டிக் கொடுப்பதன் மூலம் எனக்கு தினசரி ரூ. 50/- வரை வருவாய் கிடைத்தது. இத்தொகை எனக்கு மிகவும் பயனுள்ளதாய் இருந்தாலும் குடும்ப செலவிற்கு போதுமானதாக இல்லை.

இந்நிலையில் ஏதாவது சுய தொழில் செய்து வருவாய் பெறலாம் என்று தீர்மானித்த நான், சீர்காழி நகராட்சிக்கு அருகில் சிறிய பூக்கடை ஆரம்பிக்க விரும்பினேன். தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் சாலையோர வியாபாரிகள் (Street Vendors) திட்டத்தில் ரூ.10,000/- வங்கிக் கடன் எனக்கு வழங்கப்பட்டது. அந்தத் தொகையை மூலதனமாகக் கொண்டு, கடை ஆரம்பித்து மாதந்தோறும் கணிசமான வருவாய் பெற ஆரம்பித்தேன். நான் பெற்றக் கடனையும் முறையாகத் திரும்பச் செலுத்தி விட்டேன். தற்போது எந்தவிதக் கடனும் இல்லாமல் எனது பூக்கடையை நடத்தி வருகிறேன். இதன் மூலம் கிடைக்கும் வருவாயில் எனது குடும்பத்தின் வறுமையும் நீங்கி வருகிறது. வறுமையில் வாடிய எனக்கு நிரந்தர வருமானம் கிடைக்கச் செய்த தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- வாசுகி

சுய உதவிக் குழுக்களின்
செயல்பாடுகளை அறிந்திட
**முற்றம் படியுங்கள்!**

முற்றம் மேலும் மேலும்
வளர்ந்திட உங்களின்
**ஆதரவை தாருங்கள்!**







முற்றத்திற்கு சந்தா
**செலுத்திடுங்கள்!**

புத்தகத்தைப் படிக்க என்னை
**Scan செய்யவும்**

| முற்றம் இதழின் சந்தா விபரம் | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 240/- |
| இரண்டு ஆண்டு | ரூ. 450/- |
| மூன்று ஆண்டு | ரூ. 680/- |

| விளம்பரக் கட்டணம் | |
|---|---|
| அட்டையின் 2-வது பக்கம் | ரூ. 50,000/- |
| அட்டையின் 3-வது பக்கம் | ரூ. 50,000/- |
| அட்டையின் பின்பக்கம் | ரூ. 50,000/- |
| புத்தகத்தின் உள்பக்கம் | ரூ. 35,000/- |

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை முற்றம் (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

**வாசகர்கள் முற்றம் இதழ் குறித்த உங்களின் விமர்சனங்களை உங்கள் குழுவின் அஞ்சல் முகவரி மற்றும் புகைப்படத்துடன் முற்றம் இதழிற்கு அனுப்பலாம். சிறந்த விமர்சனங்கள் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும்.**

**விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி**

**முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,**
அன்னை தெரசா மகளிர் வளாகம், 1வது மாடி, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

# சூரிய ஒளி மின்சாரம் தடையைத் தகர்த்தது. சுறுசுறுப்பாக அரிசி ஆலை இயங்குது.

எங்கள் கீரனூர் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம், 2016 ஆம் ஆண்டு புதுக்கோட்டை மாவட்டம், நார்த்தாமலை கிராமத்தை சுற்றியுள்ள உள்நாட்டு நெல் வகைகளை உற்பத்திச் செய்யும் 600 உழவர் உறுப்பினர்களை ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்டது. புதுக்கோட்டை மாவட்டத்தின் விராலிமலை, கந்தர்கோயில் மற்றும் அன்னவாசல் வட்டாரங்களைச் சேர்ந்த 76 கிராமங்களில் 1300 ஏக்கரில் உள் நாட்டு நெல் வகைகள் இயற்கை பாசன முறையில் பயிரிடப்பட்டு வருகின்றன.

இதில் மாப்பிள்ளை சம்பா, கருப்பு கவுனி, கிச்சிளி சம்பா, கருடன் சம்பா, ஜீரக சம்பா மற்றும் இன்னும் பல நெல் வகைகள் பயிரிடப்படுவதுடன், எண்ணெய் வித்துக்களிலிருந்து எண்ணெய் வகைகளையும், சிறுதானியங்களிலிருந்து மாவு வகைகளையும் உற்பத்திச் செய்து மதிப்புக் கூட்டி விற்பனைச் செய்கின்றோம். நெல் தானியங்களை எங்கள் உழவர் உறுப்பினர்கள், பிற உழவர்கள், திருச்சி, தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறையில் உள்ள வழக்கமான மொத்த விற்பனையாளர்களிடமும் விற்பனைச் செய்கின்றோம்.




கீரனூர் மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் விளையும் பாரம்பரிய நெல் வகைகளை (சிவப்பு மற்றும் கருப்பு வகைகள்) சீர்படுத்தும் முறையில் சில பிரச்சனைகளை எதிர்கொண்டோம். நெல்லிலிருந்து அரிசியைப் பிரிக்கும் செயல்முறையில், மேல்தோலை மட்டும் தவிடாக நீக்கும் நவீன தொழில்நுட்ப இயந்திரம் தேவைப்பட்டது.

எங்கள் நிறுவனத்திற்கு 2021ஆம் ஆண்டு வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் கோவிட் சிறப்பு நிதியுதவியின் மூலம் நவீன நெல்லுடைக்கும் இயந்திரம் வழங்கப்பட்டது. அவற்றின் மூலம் நாங்கள் தற்பொழுது பாரம்பரிய நெல்லிலிருந்து அரிசியை தரமாக பிரித்தெடுப்பதுடன், எங்களின் அன்றாட உணவிற்கும் அந்த அரிசி வகைகளையே பயன்படுத்துகின்றோம். மேலும் இந்த அரிசி ஆலை கிராமத்தின் மின் வழங்கல் சக்திக்கு உட்பட்டே இயங்கி வந்தது.

அதில் மின் ஏற்ற இறக்கம், மின் தடை மற்றும் பொதுவாக அளவிடப்பட்ட மும்முனை (3-phase) பொது மின் இணைப்பு மற்றும் சில நேரங்களில் மின் மாற்றி அப்புகளை பராமரிக்கும் செலவு போன்றவை பொதுப் பிரச்சனைகளாக இருந்தன. வாடிக்கையாளரின் தேவைக்கு சரக்கு அனுப்பவும், உழவர்களின் நெல் வகைகளை அரிசியாக பிரிக்கவும் தாமதப்பட்டதால் வருவாய் இழப்பை சந்திக்க வேண்டியிருந்தது.

இவற்றை சரிசெய்ய வாழ்ந்து காட்டுவோம் திட்ட ஆதரவில் மேற்கூரையில் சூரிய ஒளி பேனல்கள் அமைத்து மின் தடையின்றி ஆலை இயங்குகின்றது. இதன் மூலம் முழு வீச்சில் ஆலை இங்குவதுடன் வருவாயும் தொடர்ந்து கிடைத்து வருகின்றது.

அரிசி ஆலை முழுவதும் சூரிய ஒளி மின்சாரத்தில் இயங்குவதால் தடையின்றி செயல்பட்டு வருவதுடன், தனித்த மின் சக்தியைக் கொண்டு செயல்படுகின்றது. இதனால் ஆலையிலுள்ள அனைத்து இயந்திரங்களையும் பயன்படுத்த முடிகின்றது, மேலும் எங்களின் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் பொருட்களை உரிய நேரத்தில் வழங்கவும் முடிகின்றது.

சூரிய ஒளி மின் அரிசி ஆலை மூலம், பாரம்பரிய நெல் வகைகளை 500 கிலோ வரை உடைத்து அரிசியாக்கப்படுகின்றது. எங்கள் ஆலையின் அரிசி செயல்முறைகளில் முன் சுத்திகரிப்பு, தவிடு நீக்கம், கல் நீக்கம், தரப்படுத்துதல் போன்றவை செய்யப்படுகின்றன. இவற்றுடன் சிறுதானியங்களை தரமுயர்த்தும் செயல்பாடுகளான தூய்மைப்படுத்துதல் மற்றும் பல்வரைசிங் போன்றவை செய்யப்படுகின்றன. வாழ்ந்து காட்டுவோம் திட்ட ஆதரவின் மூலம் தற்பொழுது பசுமை வழியில் வளமான அரிசி ஆலையை நல்ல லாபத்துடன் இயக்கி வருகின்றோம். எங்கள் ஆன்லைன் போர்ட்டல் www.thumbaiagri.com மூலம் மதிப்பு கூட்டப்பட்ட உணவுப் பொருட்கள் விற்பனை, நெல் சாகுபடிக்கான சொட்டு நீர் பாசன முறைகள் மற்றும் கார்பன் வரவுகள் பற்றிய ஆராய்ச்சி போன்றவை பசுமை நடைமுறைகளின் நன்மைகள் ஆகும்.

- உறுப்பினர்கள், கீரனூர் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம்



# மூங்கில் கலையினிலே... நிலையான தொழில்வளமே!

திருப்பூர் மாவட்டம், பொங்கலூர் வட்டாரத்திலுள்ள தெற்கு அவினாசிபாளையம் ஊராட்சியில் வாழும் எங்களுக்கு மூங்கில் கூடைகள் பின்னுவது முக்கிய தொழிலாகும். எங்கள் கிராமத்தில் மூங்கில் கூடை பின்னுவதிலும், கைவினைப் பொருட்களைச் செய்வதிலும் பெரும்பாலும் பெண்களே ஈடுபட்டிருக்கின்றோம். எங்கள் கிராமத்திலுள்ள ஆண்கள் வேளாண்மை மற்றும் சிறிய கூலித் தொழில்களை செய்து வருகின்றனர்.

எங்களின் குழுவின் மூலம் பின்னப்படும் மூங்கில் கூடைகளையும், கைவினைப் பொருட்களையும் சுற்று வட்டார ஊர் கோயில் திருவிழாக்களிலும் உள்ளூர் விழாக்களிலும் விற்பனை செய்து வந்தோம். எங்கள் தொழிலின் மூலப்பொருளான மூங்கில் கம்புகளை நாங்கள் உள்ளூர் வணிகர்களிடமிருந்தே வாங்குகின்றோம். நாங்கள் வாங்கும் மூலப்பொருட்களின் (மூங்கில் கம்புகள்) விலை அதிகரித்து வருவதால், மூங்கில் கைவினைப் பொருட்களைச் செய்வது எங்களுக்கு பெரும் முட்டுக்கட்டையாக மாறியது. எனவே, ஒரு சில பெண்கள் மட்டுமே குறைந்த எண்ணிக்கையில் மூங்கில் கூடைகளைச் செய்து வந்தோம்.

எங்களின் 'மூங்கில் கூடை உற்பத்தியாளர் தொழிற்குழு', தெற்கு அவினாசிபாளையம் ஊராட்சியின் 10 மகளிர் உறுப்பினர்களை ஒருங்கிணைந்து 2021ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. எங்கள் தொழிற்குழுவிற்கு வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் ரூ.75,000/- தொடக்க நிதி வழங்கப்பட்டு, அதில் நாங்கள் மூலப்பொருட்களை மொத்தமாகக் கொள்முதல் செய்தோம். அந்த மூலப்பொருளிலிருந்து எங்கள் குழுவின் உறுப்பினர்கள் மூங்கில் கூடைகளையும் கைவினைப் பொருட்களையும் தடையில்லாமல் தொடர்ந்து உற்பத்திச் செய்ய முடிகிறது. தற்பொழுது நாங்கள் தயாரிக்கும் கைவினைப் பொருட்களை உள்ளூரில் இயங்கும் இயற்கைப் பொருள் விற்பனையகங்களிலும், கடை வைத்திருப்பவர்களும் முன்கூட்டியே சொல்லி வைத்து (pre-orders) தயாரானதும் வாங்கிக் கொள்கின்றனர்.

எங்கள் தொழிற்குழுவின் மூலம் தயாரிக்கப்பட்ட மூங்கில் கூடைகள், தட்டுகள், குவளைகள், தொங்கும் கூடைகள் போன்றவை பொதுமக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. சுற்றுச்சூழலை அச்சுறுத்தும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு நடுவில், மக்கும் தன்மையுள்ள மூங்கில் கைவினைப் பொருட்கள் சுற்றுச்சூழலுக்கு மாபெரும் நண்பனாக விளங்குகிறது. அதனால் அண்மைக் காலங்களில், மக்கள் தங்கள் வாழ்வியல் முறைகளை இயற்கைக்குத் தோழமையாக மாற்றிக்கொண்டு இயற்கைப் பொருட்களை ஆர்வமுடன் வாங்கி ஆதரவளிக்கின்றனர்.

எங்கள் மூங்கில் கைவினைப்பொருள் உற்பத்தியில் பொதுவாக ஒவ்வொரு உறுப்பினரும் ஒரு நாளைக்கு ரூ. 400/- முதல் ரூ. 500/- வரை வருமானம் ஈட்டுகின்றோம். மாத அளவில் கணக்கிட்டால், ஒருவரது தொழில்திறன் அல்லது மூங்கில் பொருட்களின் வரவேற்பைப் பொறுத்து வருமானம் மாறுபடும். கைவினை உறுப்பினர்கள், முன்-தொழிலாணைகளைப் (preorders) பெறும்போது, குழுவாகவும், தொழிலாணை இல்லாத காலங்களில், தனித்தனியாகவும் வேலை செய்கின்றனர்.

### மூங்கில் பொருட்களின் நன்மைகள்:

சுற்றுச்சூழலுக்குத் தோழமையானது, நீடித்து உழைக்கிறது, மக்கும் தன்மை கொண்டது; மூங்கில் விரைவாக வளரும், புதுப்பிக்கத்தக்க பொருட்செல்வம்; கரியமிலவாயுவை குறைத்து பிராணவாயுவை (ஆக்சிஜன்) அதிகரித்து சுற்றுச்சூழலுக்கு நன்மை அளிக்கிறது; உற்பத்தியில் அதிக கரியமிலவாயுவை வெளிப்படுத்தும் உலோக பொருட்கள் மற்றும் மரத்தடிகளுக்கு ஏதுவான மாற்று மூங்கில் பொருட்கள் ஆகும்; இரசாய உரங்களோ, இரசாயன பூச்சிக்கொல்லிகளோ பயன்படுத்தாமல் மூங்கிலை வளர்க்கலாம்.

### பசுமைச் செயல்பாடுகளின் நன்மைகள்:

மூங்கில் தாவரம் காற்றை சுத்திகரிக்கிறது; எல்லா வகையான மண் மற்றும் காலநிலைகளிலும் வளர்கிறது; மூங்கில் பெருமளவில் கிடைக்கும் கிராமத்தில் வாழ்வோருக்கு - மூங்கில் கூடை பின்னுவது சிறந்த தொழில் வாய்ப்பு.; மூங்கில் பொருட்களை எளிதில் கொண்டுவந்து நீண்ட காலங்கள் சேமித்து வைக்க முடியும்

-மூங்கில் கூடை உற்பத்தியாளர் தொழிற்குழு



# ஆகாயத் தாமரையில் கலைநயம்... அழகிய படைப்புகளில் புதுயுகம்...!

நீர்த்தாமரை அல்லது ஆகாயத் தாமரை என அழைக்கப்படும் நீர் தாவரப் பயிர், ஆறு, ஏரி குளம், குட்டை, கால்வாய் போன்ற நீர் நிலைகளில் தண்ணீரின் மேற்பரப்பில் வெகு விரைவாக வளர்ந்து, நீர் முழுவதும் படர்ந்து செழிக்கும் தாவரம் ஆகும். இதன் வளர்ச்சி அதிகமாக இருப்பதால், பிற நீர்வாழ்த் தாவரங்களின் ஒளிச்சேர்க்கைக்கு வேண்டிய சூரிய ஒளியைத் தடுத்து, அவற்றின் வளர்ச்சியைக் குறைக்கின்றது. இதனால், பிற நீர்த்தாவரங்களை உண்டு வாழும் மீன்களின் வாழ்வியலை இது பாதிக்கின்றது. அதனால் இந்த நீர்த்தாமரையை நீரிலிருந்து அகற்றப்பட வேண்டியது அவசியமாகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு வாழ்ந்து காட்டுவோம் திட்டம், இந்த நீர்த்தாவரக் கொடியைப் பறித்து அதிலிருந்து கலைநயமிக்க கைவினைப் பொருட்களைத் தயாரித்து, இயற்கையிலிருந்து செல்வ வளத்தைப் பெற ஊக்குவித்து வருகின்றது. தூத்துக்குடி மாவட்டம், ஆழ்வார்திருநகரி வட்டாரத்தில் உள்ள மேல ஆத்தூர் ஊராட்சியில் செயல்படும் எங்களின் ‘ஆகாய தாமரை மலர்கள் உற்பத்தி தொழிற்குழு’, வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் ஆதரவு பெற்ற ஒரு தொழிற்குழு நிறுவனம் ஆகும். எங்கள் நிறுவனத்தில் ஆகாயத் தாமரையிலிருந்து மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களைச் செய்வதில் முனைப்பாக ஈடுபட்டுள்ளோம்.

ஆகாயத் தாமரையில் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை உருவாக்க, நாங்கள் முதல் கட்டமாக ஆகாயத்தாமரையைத் தண்ணீரிலிருந்து பறிக்கின்றோம். அவற்றை dredge என்ற அடிச்சேறுகளை நீக்கும் இயந்திரத்தின் துணையோடு சுத்தப்படுத்தி, பல்வேறு கைவினைப் பொருட்களைச் செய்யும் வகையில் நார் வகையாகப் பிரித்தெடுக்கின்றோம்.

முதலில் தண்ணீரிலிருந்து சேகரிக்கப்பட்ட தண்டுகள், நாரிழைகளாகப் பிரித்தெடுக்கும் வகையில் சுத்தப்படுத்தித் தயார்படுத்துகின்றோம். அதன் வேர்களையும் இலைகளையும் இயற்கை உரமாக மாற்றுகின்றோம். தண்டு பாகங்களை வெயிலில் ஐந்து முதல் ஏழு நாட்கள் உலர்த்தி சேகரித்து ஈரம் படாத இடத்தில் சேமித்து வைக்கின்றோம் அதன் பிறகு அவற்றிலிருந்து நாரை தயாரிக்கின்றோம். இந்த ஆகாயத் தாமரையின் நார்களுக்கு நெகிழ்த்திறனும், இழுத்திறன் வலிமையும் அதிகமாக உள்ளது. அதனால் இதில் கைவினைப் பொருட்களையும், கயிறுகள், இருக்கைகள் மற்றும் பாய்கள் போன்ற பயன்பாட்டுப் பொருட்களை செய்யும் வகையில், பசுமை நாராக மாற்றுகின்றோம்.



வாழ்ந்து காட்டுவோம் திட்டம் எங்கள் தொழிற்குழுவின் 20 உறுப்பினர்களுக்கும் ஹைதராபாத்திலுள்ள Creative Bee கைவினைக் கலைஞர்கள் மூலம் ஏழு மாதங்கள் தொழிற்பயிற்சியை வழங்கி அதன் பிறகு தொழிற்குழுவாக உருவாக்கப்பட்டோம். எங்கள் தொழிற்குழுவிற்கு திட்டத்தின் மூலம் ரூ. 75,000/- தொடக்க நிதி வழங்கி ஊக்கப்படுத்தினர். மேலும் எங்கள் தொழிலை விரிவாக்கும் நோக்கில், புத்தாக்கத் தொழில் ஊக்குவிப்பு நிதியாக ரூ. 2.5 லட்சம் கொடுத்து பெரும் ஆதரவை அளித்துள்ளது.

எங்கள் தொழிற்குழு மூலம் தேனீர் மேசை வில்லைகள் (Tea coaster), கூடைகள், யோகாசனப் பாய்கள், பழத்தட்டுகள், விளக்குத் தாங்கி, கைப்பை மற்றும் பெண்களுக்கான பணப்பை ஆகியவற்றை ஆகாயத்தாமரை நாரில் தயாரித்து (பின்னி), எங்களுக்கான புதிய மாற்று வருமானத்தைப் பெருக்கி வருகின்றோம். எங்கள் தொழிற்குழுவில் சராசரியாக மாதம் ரூ. 1.8 லட்சம் முதல் 2 லட்சம் வரை வருவாய் ஈட்டுகின்றோம். ஒவ்வோர் உறுப்பினரும் முழுமையாக பின்னியப் பொருட்களின் எண்ணிக்கைக்கேற்ப, மாத ரூ. 7,000/- முதல் ரூ. 10,000/- வரை வருவாய் ஈட்டுகின்றோம்.

எங்கள் தொழிற்குழுவின் உற்பத்திப் பொருட்களை உள்ளூர் சந்தையில் விற்றது போக, தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ரமேஷ் ஃபிளவர்ஸ் என்ற நிறுவனம் வாயிலாக, எங்கள் கைவினைப் பொருட்களை ஏற்றுமதி செய்ய முயன்று வருகின்றோம். மேலும் CEDAR Retail உடன் இணைந்து, உற்பத்தி ஆலையை அமைக்கவும் திட்டமிட்டுள்ளோம். வருங்காலத்தில் கைவினைப் பொருட்களுக்கான, ரோப் இந்தியா (Rope India) நிறுவனத்துடன் உடன்பாடு செய்யவும் திட்டமிட்டு வருகின்றோம். எங்கள் அனைத்து முயற்சிகளுக்கும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் தகுந்த ஆதரவை வழங்கி வருகின்றது.

- ஆகாய தாமரை மலர்கள் உற்பத்தி தொழிற்குழு

# மாம்பழ ரவா கேசரி

முக்கனிகளில் ஒன்றான மாம்பழத்தில் சுவையான சிற்றுண்டிகள் செய்யலாம். அத்தகைய சிற்றுண்டிகளில் ஒன்றான மாம்பழ ரவா கேசரி செய்யும் முறை குறித்து தெரிந்து கொள்வோம் வாருங்கள்.

**தேவையான பொருட்கள்**

மாம்பழம் 1, ரவா - 1/2 கப், தண்ணீர் - 2 கப், சர்க்கரை - 3/4 கப், நெய் - 7 மேசைக்கரண்டி, முந்திரி பருப்பு, திராட்சை, ஏலக்காய் தூள், குங்குமப்பூ

**செய்முறை:**

மாம்பழத்தின் தோலை நீக்கி சிறிய துண்டுகளாக்கி, மிக்ஸியில் சேர்த்து விழுதாக அரைக்கவும். ஒரு கடாயில், ரவாவை சேர்த்து மிதமான தீயில் பொன்னிறமாகும் வரை 5 நிமிடம் வறுக்கவும். ஒரு கடாயில் நெய் சேர்த்து, நெய் உருகியதும் முந்திரி, திராட்சை இரண்டையும் பொன்னிறமாக மாறும் வரை வறுக்கவும். அதே கடாயில் தண்ணீர் ஊற்றி, கொதிக்க வைத்து அதில் வறுத்த ரவாவை சேர்த்து தண்ணீர் வற்றும் வரை வேக வைக்கவும்.

அடுத்து அரைத்த மாம்பழ விழுதை சேர்த்து 3 நிமிடம் மிதமான தீயில் வேகவைக்கவும். மாம்பழ விழுதும், ரவையும் நன்கு வேகவைத்த பிறகு சர்க்கரை சேர்த்து நன்கு கலந்து விடவும். பிறகு ரவா கலவையில் ஏலக்காய் தூள் சேர்த்து கலந்து விடவும். அடுத்து நெய் சேர்த்து சுமார் 15 நிமிடங்கள் அல்லது கேசரி கெட்டியாகும் வரை வேகவைக்கவும். பிறகு வறுத்த முந்திரி, திராட்சை, நெய் மற்றும் குங்குமப்பூ சேர்க்கவும். சுவையான மாம்பழ ரவா கேசரி தயார்.

## பயனுள்ள குறிப்புகள்

- இட்லி மாவு, அடி மாவாக இருக்கும் போது, இட்லி, தோசை சரியாக வார்க்க முடியாது. இந்த மாவில் மிச்சம் இருக்கும் பொரியல், கூட்டு போன்றவற்றை சேர்த்து, அத்துடன் ஒரு வெங்காயத்தையும் பொடியாக நறுக்கிப் போட்டு, ஊத்தப்பமாகவோ, குழி அப்பமாகவோ சுட்டெடுத்தால் அருமையாக இருக்கும்.
- ஃப்ளாஸ்கில் காபி வைத்து அடிக்கடி உபயோகிக்கும் போது, அதை எத்தனை முறை கழுவினாலும் தண்ணீர் உலர்ந்த பிறகு ஒரு வாடை வீசும். இதை நீக்க, நியூஸ் பேப்பரை சிறு சிறு துண்டுகளாக வெட்டி, ஃபிளாஸ்கில் போட்டு, நிறைய நீர்விட்டு, 12 மணி நேரம் வைத்திருந்து, பிறகு கழுவி வைத்தால் அந்த வாடை இருக்கவே இருக்காது.
- வெயில் காலத்தில் பெருங்காயம் கட்டியாகாமலிருக்க பச்சை மிளகாயை காம்பு எடுக்காமல் பெருங்காய டப்பாவில் போட்டால் பஞ்சு போல் மிருதுவாக இருக்கும்.
- வாட்டர் ப்யூரிஃபையர் வைக்கும் போது, சிங்க் அருகிலேயே வைக்க வேண்டும். சமயங்களில் தண்ணீர் நிரம்பினால் சிங்க் வழியாக வெளியேற ஏதுவாக இருக்கும்.

# தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம்

## கடற்கரை ஓரம் கடற்பாசி வளர்ப்பு



புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி ஒன்றியம், வெட்டிவயல் ஊராட்சியில் பாலக்குடி மீனவ கிராமத்தில் சுமார் 100 குடும்பங்கள் கடற்சார்ந்த தொழில்களையே முதன்மையான வாழ்வாதாரமாக மேற்கொண்டு வருகின்றனர். மீனவர்கள் மீன் பிடிக்க சென்ற பிறகு வீட்டில் உள்ள பெண்கள் கடற்பாசி வளர்ப்பை ஒரு பகுதி தொழிலாக செய்து வந்தனர். நமது திட்டத்தின் மூலம் அப்பகுதி மக்களை ஒருங்கிணைத்து அவர்களின் தேவைகளைக் கண்டறியும் முகாம் நடத்தப்பட்டு, அதன் விளைவாக கடற்பாசி வளர்ப்போரைக் கொண்ட கூட்டுப் பொறுப்புக் குழு உருவாக்குவது என முடிவு செய்யப்பட்டு 5 பேர் கொண்டு குழுவாக கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டன.

எல்லா பருவ நிலையிலும் கடற்பாசி வளர்க்கும் வகையில் இக்குழுவின் உறுப்பினர்களுக்கு தேவையான தொழில்நுட்பப் பயிற்சிகள் வழங்கப்பட்டது. மேலும் இந்தியன் வங்கி மணமேல்குடி கிளையில் ஒரு குழுவிற்கு ரூ.1,50,000/- வீதம் வணிக மேம்பாட்டு முகவர் ஒப்பந்தம் மூலம் தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் மூலம் வங்கிக் கடன் பெற்றுத் தரப்பட்டது. தற்போது மேற்காணும் கூட்டுப் பொறுப்புக் குழுக்களைச் சேர்ந்த உறுப்பினர்களும் முழு நேரமாக கடற்பாசி வளர்ப்புத் தொழில் செய்து நல்ல லாபம் பெற்று தங்களின் குடும்பங்களை வறுமையிலிருந்து மீட்டு வருகின்றனர். தாங்கள் பெற்ற வங்கிக் கடனையும் முழுமையாக செலுத்திய 4 கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் இரண்டாம் வங்கி இணைப்பாக தலா ரூ. 2,00,000/- கடன் பெற்றுள்ளனர்.

## மீன் விற்பனை தொழில் செய்து வாழ்வாதாரம் பெற்ற பயனாளியின் வெற்றிக் கதை



கடலூர் மாவட்டத்தில், தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம் செயல்படும் பச்சையாங்குப்பம் ஊராட்சியில் வசிக்கும் திருமதி. குப்பு மாணிக்கம் அவர்களின் வருமானம் ஈட்டும் தொழிற்கடன் பெற்று வாழ்வாதாரம் பெற்ற வெற்றிக் கதையை கூறுகையில்

“என் பெயர் குப்புமாணிக்கம், நான் எங்கள் கிராமத்தில் கூலி வேலை செய்து வந்தேன். அதில் கிடைக்கும் வருமானம் என் குடும்பத்திற்கு போதுமானதாக இல்லை. அப்போது தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம் மூலம் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு வருவாய் ஈட்டுவதற்கு குறைந்த வட்டியில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் ரூ.20,000/- கடன் தருவதாக அறிந்து, கூட்டமைப்பு நிர்வாகிகளை அணுகி கடன் பெற்று அப்பணத்தை கொண்டு மீன், இறால் மற்றும் நண்டு போன்றவற்றை மீனவர்களுக்கு முன்பணமாக கொடுத்து, குறைந்த விலைக்கு மீன்களை கொள்முதல் செய்து அவற்றை மீன் விற்பனை செய்யும் அங்காடியில் விற்பனை செய்து நல்ல இலாபம் ஈட்டி வருகிறேன்.

கிடைக்கும் இலாபத்தினைக் கொண்டு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் பெறப்பட்ட கடனை முழுமையாக கடன் திருப்பம் செய்து விட்டேன். மேலும் இலாபத்தில் ஒரு பங்கைக் கொண்டு, சுழற்சி முறையில் மீன்களை கொள்முதல் செய்து தொடர்ந்து என் தொழிலை இலாபகரமாக செய்து வருகிறேன். என்னை போன்று வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள மகளிர் இக்கடன் திட்டத்தை பயன்படுத்தி வாழ்வாதாரம் பெற வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்” எனத் தெரிவித்தார்.

Published by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY from Tamilnadu Corporation for Development of Women’s Ltd., Printed by V. RAMESH, Chennai Micro Print Private Ltd., New No. 130 / Old No. 34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai – 600 029. Published from (1,30,000 Copies Circulated) Tamilnadu Corporation for Development of Women’s Ltd., Annai Teresa Mahalir Valagam, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034, Editor : S. CHINNAPPAN.

# மகளிரின் படைப்பினில்
# ஆகாயத் தாமரை
# பொருளில் வந்தது...!



எங்கள் தொழிற்குழுவிற்கு
**VKP திட்டத்தின் மூலம்**
தொழிற் பயிற்சி மற்றும் தொடக்க நிதி

**ரூ. 75,000 வழங்கி**
**ஊக்கப்படுத்தப்பட்டுள்ளது**





| | | |
|---|---|---|
| நிறுவனப் பெயர் | : | ஆகாயத் தாமரை மலர்கள் உற்பத்தி தொழிற்குழு |
| மாவட்டம் | : | தூத்துக்குடி |
| வட்டாரம் | : | ஆழ்வார்திருநகரி |
| ஊராட்சி | : | மேல ஆத்தூர் |

**உற்பத்திப் பொருட்கள்:**

- தேனீர் மேசை விரிப்புகள்
- யோகாசனப் பாய்கள்
- பழத்தட்டுகள்
- விளக்குத் தாங்கி
- கைப்பை
- பெண்களுக்கான பணப்பை

இவர்களது உற்பத்திப் பொருட்களை
வாங்க தொடர்புகொள்ளவும்

**93446 91356**

## வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

5வது தளம், திருவிக தொழிற்பேட்டை, சிட்கோ தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை- 600032, தமிழ்நாடு

(044) 434 43200 | tnrtpstate@gmail.com | www.tnrtp.org

VaazhndhuKaattuvom VaazhndhuKaattuvom tn_rtp

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS. 344/2019
Reg.No. TN/CH/(C)/455/2021-2023 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2021-2023
Date of Publication : 1st Week of the every month Posted between 8th – 14th June 2023 Posted at Patrika Channel, Egmore.

வாழ்வாதார உதவி அழைப்பு எண்

# 155 330

## LIVELIHOOD HELPLINE NUMBER

அனைத்து வேலை நாட்களிலும், காலை 09.30 மணி முதல் மாலை 06.30 மணிவரை தொடர்பு கொள்ளலாம்.




TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION

*Empowering Lives*

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம்
நகர்ப்புற ஏழை எளிய மக்கள், தெருவோர வியாபாரிகள் மற்றும் நகர்ப்புற வீடற்றோருக்காக பல்வேறு திட்டங்களை தீட்டி தமிழக அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருவது பெருமைக்குரியது.